# எசேக்கியேல் (கி.மு.597 )

எசேக்கியேல் (கர்த்தர் பெலப்படுத்துவார்)

எசேக்கியேல் ஒரு தீர்க்கதரிசியாவார், இவர் ஒரு ஆசாரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இருபத்தைந்து வயதாக இருக்கும்போது, நாடுகடத்தப்பட்டவர்களை பாபிலோனுக்கு கி.மு. 597 இல் கூட்டிச் சென்றவராவார். ஐந்து வருடங்களுக்குப்பின்பு தீர்க்கதரிசி ஊழியத்திற்கான அழைப்பு இவருக்கு வந்தது. தெல்அபிப் என்ற இடத்திலுள்ள சேபார் நதியண்டையில் குடியிருந்த சிறையிருப்பாளருக்கு தீர்க்கதரிசனம் கூறினார். இவரே எசேக்கியேல் புத்தகத்தின் ஆசிரியராவார். தன்னுடைய புத்தகத்தில் தன்னை, பூசியென்னும் ஆசாரியனுடைய குமாரனாகிய எசேக்கியேல் என்று தன்னை அறிமுகம் செய்கின்றார். (1:3). அவர் தன் கண்ணுக்கு பிரியமானவள் என்னும் ஒருத்தியை திருமணம் செய்திருந்தார். (24:16). அவருடைய வாழ்க்கையின் மிகவும் துக்கமான நிகழ்வு என்னவென்றாரல், அவருடைய மனைவியின் மரணமாகும். தீர்க்கதரிசிக்கு வெளிப்பாடு கிடைத்த அதேநாளே, பரிசுத்த நகரமாகிய எருசலேமிற்கு எதிராக பாபிலோனிய இராணுவம் முற்றுகையிட்டபோது, அவளுடைய மனைவி மரணமடைந்தாள். எருசலேமின் அழிவின்போது ஜனங்கள் அனுபவித்த துக்கத்திற்குச் சமமாகவே எசேக்கியேலின் மனைவியின் மரணத்தின் துக்கமும் அமைந்தது. அவளுடைய மரணத்திற்காக துக்கம் கொண்டாடவேண்டாம் என்று எசேக்கியேல் கட்டளையிடப்பட்டார். அவர்களுடைய பிரியமான நகரத்தின் அழிவில் ஜனங்கள் துக்கம் கொண்டாடும்போது உன்னுடைய மாதிரியை அவர்களும் பின்பற்றுவார்கள். (24:15–22). எங்கள் பாவங்கள் எவ்வளவு அசிங்கம் என்பதை எசேக்கியேல் எங்களுக்கு காண்பித்தார். இதனாலேதான் கர்த்தர் தன்னுடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி எங்களுக்காக பாவப்பரிகாரியாக பலியாக மரித்து எங்களை மீட்டுக் கொண்டார்

இந்தப்புத்தகத்திலுள்ள பெரிய பகுதியான புத்தகத்தில், (அதி 25—32) இஸ்ரவேலின் அயல் தேசங்களுக்கான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு கூறப்பட்டது, காரணம் இவர்களுடைய அளவுகடந்த சுரூபவழிபாடுகளாகும். அதிகாரங்கள் 8—11 உண்மையில் ருசிகரமானவையாகும் காரணம், எசேக்கியேல் தன்னுடைய தரிசனத்தில் எருசலேம் நகரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார், அப்போது அவர் அங்கு தீர்க்கதரிசனத்தை உரைத்தார். (8:3). அதிகாரம் 11 இன் முடிவில், எசேக்கியேல் மீண்டும் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டார், அங்கு அவர் தன்னுடைய செய்தியைத் தொடர்ந்து கூறிவந்தார். (11:24–25).

## புத்தகத்தின் கட்டமைப்பு.

எசேக்கியேல் புத்தகம் 48 அதிகாரங்களைக் கொண்டுள்ள போதிலும், இதனை இலகுவாக ஆராந்து விளங்கிக் கொள்ள முடியும். எசேக்கியேலைப்பற்றிய சிறிய குறிப்புக்களுடன், தன்னுடைய இந்த ஊழியத்தின் நோக்கத்தைக்கூறியதன்பின்பு, புத்தகம் மூன்று பிரிவுகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

1. யூதாவின்மீதான நியாயத்தீர்ப்பு (அதி. 4—24)
2. சூழ உள்ள தேசங்களின் நியாயத்தீர்ப்பு (அதி 25—32)
3. கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்களுக்கான எதிர்கால ஆசீர்வாதங்கள். (அதி 33-48)

எசேக்கியேல் ஒரு ஆசாரியனாவார், இவர் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்த யூத ஜனங்களின் மத்தியில் வாழ்ந்தவராவார். இந்த புத்தகத்தின் முதலாம் அதிகாரத்தில், தன்னுடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தர் கொடுத்த அற்புத தரிசனங்களை விபரிக்கின்றார். அவர் நான்கு ஜீவிக்கின்ற பிராணிகளைக் காண்கின்றார், அவைகள் ஒவ்வொன்றிலும், ஒரு மனிதன், ஒரு சிங்கம், ஒரு எருது, ஒரு கழுகு முகங்களைக் கொண்டிருந்தன. இந்த அந்நிய பிராணிகள் உருவக சிங்காசனத்துக்கு ஒப்பாகக் காணப்பட்டன, இவை கர்த்தருடைய வல்லமைக்கான ஒப்பனையாகக் காணப்பட்டன. அவர் தீர்கதரிசியை அழைத்து நியாயத்தீர்ப்பைக் கூறும்படி கூறியபோது, எசேக்கியேலுக்கு கர்த்தருடைய மகிமை தெளிவாகப் புலனாகியது, இந்த

தரிசனங்கள் அவரின் தொனியில் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. இதையோத்த இன்னும் பல தரிசனங்கள் புத்தகம் முழுவதும் வருகின்றன. எசேக்கியேல் கர்த்தருடைய உடன்படிக்கையின் பிள்ளைகளுக்கும், இஸ்ரவேலர்களுக்கு அயலிலுள்ள புறஜாதித் தேசத்தாருக்கும் கர்த்தருடைய செய்தியை கூறிக்கொண்டிருந்தார்.

புத்தகத்தின் அடுத்த பெரும்பகுதி, அதிகாரங்கள் 25—32 ஆகும். இஸ்ரவேலைச் சூழவுள்ள தேசங்களுக்கு எதிரான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு கூறப்படுகின்றன. நியாயத்தீர்ப்புகள் கூறப்பட்ட நாடுகளில் உள்ளடக்கப்பட்டவை அம்மோன், மோவாப், ஏதோம், பெலிஸ்தியா, தீரு, சீதோன் மற்றும் எகிப்து என்பவையாகும்.

புத்தகத்தின் இறுதிப்பகுதி அதிகாரம் 33—48 ஆகும் எதிர்காலத்தில் இஸ்ரவேல் மக்களுடைய மீள்நிலைப்படுத்தல் பற்றிக் குறிப்பிடுகின்றன. இதில் எசேக்கியேலின் உலர்ந்த எலும்புகள் (**அதி**.37) பற்றிய தரிசனமும் அடங்கியுள்ளது. கர்த்தரின் கட்டளைப்படி, எசேக்கியேல் உலர்ந்த எலும்புகளைப் பார்த்துப் பேசினார், அப்போது எலும்புகள் உயிரடைந்தன. பிற்பாடு கர்த்தர் எலும்புகளைப்பார்த்துக் கூறினார், "என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்". இது கர்த்தரிடமிருந்து வந்த தெளிவான வாக்குறுதியாகும், அதாவது தன்னுடைய உடன்படிக்கையின்பிள்ளைகள், பாபிலோனிய சிறையிருப்பு முடிந்த பிற்பாடு, அவர்களுடைய தேசத்தில் மீள் குடியேற்றுவதற்காக, இந்த கருத்து தொடர்ந்து 40—48 அதிகாரங்களில் தொடர்ந்து கூறப்படுகின்றன. அங்கு எருசலேம் ஆலயம் மீள் நிலைப்படுத்தப்படுதல்பற்றிக் கூறப்படுகின்றது, மற்றும் பலியிடுதலும் புதுப்பிக்கப்பட்டு பலியிடப்படும், அத்துடன் ஆராதனையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவையாவும் வெளிப்படுத்தல் புத்தகத்தின் கடைசி அதிகாரத்திற்குச் சமமாக உள்ளன. எசேக்கியேல் மேசியாவின் ராஜ்ஜியம் வரும் என்பதைச்சுட்டிக் காண்பிக்கின்றார்.

## எழுதியவரும் காலமும்.

இந்தப்புத்தகத்தை எழுதியவர் தீர்க்கதரிசி எசேக்கியலாகும். இவர் கர்த்தருடைய பேச்சாளனாக பாபிலோனில் யூதச்சிறையிருப்பாளர் மத்தியில் வாழ்ந்து வந்தார். சில வேத ஆய்வாளர்கள் இந்தப்புத்தகம் வேறு நபரால் எழுதியிருக்கலாம் என்று கூறுகின்ற போதிலும், இந்தப் புத்தகம் எசேக்கியேல் இந்த தீர்க்கதரிசனங்களைக் கூறியுள்ளார் என்று கூறுகின்றது. தீர்க்கதரிசி தன்னை எசேக்கியேல் ஒரு ஆசாரியன் என்றும் பூசியின் மகன் என்றும் "கூறுகின்றார். (1:3). அவர் தன்னுடைய ஊழியம் யோயாக்கீன் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷத்தில் ஆரம்பமானது என்று கூறுகின்றார். இவர் யூதாவின் அரசனாக இருந்தார், பாபிலோனியர்களால் கி.மு. 597**இல்** சிறைப்பிடிக்கப்பட்டார். கி.மு 593இல் எசேக்கியேல் தன்னுடைய ஆரம்ப தீர்க்கதரிசனத்தைக் கூறியிருந்தார். அவர் கடைசியாகக் குறிப்பிட்ட திகதி "இருத்து ஏழாம் வருடம்" என்பதாகும் (29:17) அத்துடன் சிறையிருப்பின் இருபத்தைந்தாவது வருடமாகும். (40:1). ஆனபடியால் எசேக்கியேல் நாடுகடத்தப்பட்ட சிறையிருப்பாளர்கள் மத்தியில் இருபத்தியிரண்டு வருடங்கள் கி.மு.571 வரை தீர்க்கதரிசனம் கூறினார். அவர் இந்த புத்தகத்தை சிறிது காலம் சென்றபின்பு கி.மு. 570இல் எழுதியுள்ளார்.

## சரித்திர ஒழுங்குகள்.

இந்த எசேக்கியேல் புத்தகம் கர்த்தரின் உடன்படிக்கையின் பிள்ளைகளுடைய பாபிலோனிய சிறையிருப்பு காலத்தின் புத்தகமாகும். பாபிலோனியர்கள் மூன்று தடவைகளில் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு கைதிகளாக நாடுகடத்தினார்கள். ஆரம்பத்தில் கி.மு 605இல் முதலாவது பிரயாணம் இடம்பெற்றது. இரண்டாவது தடவையாக நகரம் கி.மு. 597இல் தாக்கப்பட்டது. அப்போது மேலும் அதிகமானவர்கள் நாடுகடத்தப்பட்டார்கள். இந்தக் காலத்தில்தான் எசேக்கியேலும் நாடுகடத்தப்பட்டார். மிகுதியான நாடுகடத்தல் நிகழ்வுகள் கி.மு. 588-586 வரை இடம் பெற்றது. நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்து மிகுதியாக இருந்த குடியிருப்பாளர்களையும் நாடுகடத்தினார்.

எசேக்கியேல் புத்தகத்தின் ஆரம்ப தீர்க்கதரிசனங்களில், எழுத்தாளர் தான் ஒரு சிறைக்கைதியாக இருப்பதாகவும், எருசலேம் விரைவில் அழிக்கப்படுவதை எதிர்பாத்துக் கொண்டிருப்பதாகவும் எழுதியுள்ளார். அதிகாரம் 24 இல் நகரத்தின் இறுதி முற்றுகைபற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த நாளின் பேரையும் இந்தத் தேதியையும் நீ எழுதிவை, இந்தத் தேதியில்தானே பாபிலோன் ராஜா எருசலேமில் பாளயமிறங்கினான். (24:2). இது சமையல்பாத்திரம் கொதிக்கவைத்த இறைச்சியிலிருந்து நுரை தோன்றுதல் என்பது யூதாவுக்கு எதிரான நியாயத்தீர்ப்பாகும். இந்த நாளில் தீர்க்கதரிசியின் பிரியமான மனைவி மரித்துவிட்டாள். இது கர்த்தருடைய சொற் கேட்டு நடக்காத தேசத்தின் மேல் கர்த்தருக்கு ஏற்பட்ட கோபத்தின் அடையாளமாகும். (24:15–24).

எசேக்கியேல் புத்தகத்தின் பெரும்பகுதிகள் எருசலேமின் நீண்ட முற்றுகைக்காலத்தின் போது எழுதப்பட்டவைகளாகும். அப்போது எசேக்கியேலும் மற்றக் கைதிகளும் ஒன்றாக பாபிலோனில் இருந்தனர் பின்பு நகரம் வீழ்ச்சியடைந்தது என்ற செய்திய கேட்டார்கள், இந்த செய்தியை எசேக்கியேல்தான் அவர்கள் மொழியில் செய்தியைக் கூறினார். இந்த செய்தி ஜனங்களுக்கு மிகவும் துக்கமாக இருந்தது. (33:21–29)

## இறையியல் பங்களிப்பு

எசேக்கியேல் புத்தகத்தின் மிகப் பெரிய போதனையானது, ஒவ்வொருவரும் தங்களுடைய பாவங்களுக்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும் என்பதாகும். ஒவ்வொருதரும் கர்த்தருக்கு முன்பாக நிற்கும் போது தங்கள் பாவங்களுக்கு தாங்களே பொறுப்பு என்ற சத்தியத்தை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். எசேக்கியேலின் காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகள் தாங்களே என்ற குழுவாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் தேவைகளைச் சந்திப்பதற்கும், கர்த்தருடைய விருப்பத்தைச் செய்வதற்கும் முனைந்தார்கள். இனிமேல் வரப்போகும் எதிர்கால சந்ததியினர் தங்கள் தாந்தையினரின் பாவங்களுக்காக கணக்கொப்புக்கொடுக்க வேண்டும் என்று நம்பினார்கள். ஆனால் எசேக்கியேல் பின்வருமாறு கூறினார், "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல் தான் இருக்கும். "(18:20). இதனால் ஒவ்வொருவரும் கர்த்தரைப் பின்பற்றத் தீர்மானித்தார்கள். நாங்கள் ஒருவரும் எங்கள் மூதாதையினரின் விசுவாசத்தில் தங்கியிருக்கவில்லை, மாறாக தங்கள் தங்கள் விசுவாசத்தினாலேயே கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியும்.

## அறிமுகம் :

1. எசேக்கியேல், பூசி என்னும் பெருடைய ஆசாரியருடைய மகனாவார். இவர் யோகாச்சீன் அரசனுடன் கி.மு. 597இல் நாடுகடத்தப்பட்டவராகும். அவருடைய மனைவி கி.மு. 588இல் முற்றுகை ஆரம்பிக்கப்பட்ட நாளில் மரித்துப் போனார். (எசே. 24:1, 15-18).

2. ஐபிராத்து நதியருகேயுள்ள சீபார், என்னும் நகரத்தில் எசேக்கியேல் குடியிருந்தார், இவர் தன்னுடைய முப்பதாவது வயதில் இந்தப்புத்தகத்தை எழுதத் தொடங்கினார்.

3. அவரது ஊழியம் இரண்டு வகையானது, நாடுகடத்தப்பட்டவர்கள் மத்தியில் அவர்கள் பாவங்களைச் சுட்டிக்காட்டுதலும், எதிர்காலத்தில் கர்த்தருடைய ஆசீர்வாங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உற்சாகப்படுத்தியும் வந்தார்.

4. எசேக்கியேல் பழைய ஏற்பாட்டின் சில புத்தகங்களுடன் ஒப்பிடப்படுகின்றன. அவையாவன:

a. ஏசாயா, கர்த்தருடைய இரட்சிப்பைக்குறித்துப் பேசுகின்றது.

b. எரேமியா நியாயத் தீர்ப்புப் பற்றி பேசுகின்றது.

c.  தானியேல் கர்த்தருடைய இராஜ்ஜியம் பற்றிப் பேசுகின்றது.

d. எசேக்கியேல் கர்த்தருடைய மகிமைபற்றிப் பேசுகின்றது.

I.  **கர்த்தருடைய மனிதனைப் பரிசுத்தமாக்குதல்**:- எசேக்கியேல்  (1, 2, 33).
A. ஜீவிக்கின்ற உயிரினங்களின் தரிசனத்தை ஏசாயா காண்கின்றார்.

1. இந்த ஜீவன்கள் பற்றிய விளக்கம். (1:4-28.)

2. இந்த ஜீவிக்கின்ற மிருகங்களின் அடையாளங்கள். அவைகள் யார்? இந்த ஜீவன்கள்  பின்பு எசேக்கியேலால் அடையாளம் காணப்பட்டன (10:20), அவைகள் சேரூபீன்கள், உயர்மட்டத்திலுள்ள தேவதூதர்களாகும்.  அவைகள் மூன்றுவிதமான  தருணங்களில் தோன்றுகின்றன.

a. ஏதேன் தோட்டத்தில், ஆதாமின் பாவத்திற்குப்பின்பு அவர்கள் தோட்டத்திற்குள் நுழையாமல் பாதுகாக்கின்றன.  (ஆதி. 3:22-24).

b. எசேக்கியேலுக்கு பாபிலோனில் காட்சி கொடுக்கின்றன.  (1:4-28).

c. வானத்தில், யோவானுடைய தரிசனத்தில் காட்சி கொடுத்தன.  (வெளி. 4:6-8).

3**. இந்த ஜீவனுள்ள ஜீவன்களின் கடமைகள்**.

a. கர்த்தருடைய நீதியைக் காத்து உறுதிப்படுத்துவதற்காக.   (ஆதி.3:24; எசே. 26:1; 36:8, 35).

b. கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் அடையாளப்படுத்துவதற்காக.  (எசே 25:22; 37:9).

c. கர்த்தருடைய நிர்வாகத்தில் ஒத்தாசை செய்வதற்காக. (1 சாமு. 4:4; சங்கீ80:1; 99:1; எசேக். 1:22, 26).

d. இயேசுக்கிறிஸ்த்துவின் ஆசீர்வாதமான உலக ஊழியத்தை ஞாபகப்படுத்துவதற்காகவும். இது நான்கு சுவிஷேசங்களின் சுருக்கத்தின்போது இதனைக் கண்டு கொள்ளலாம்.

(1) மத்தேயு (யூதர்களுக்கு எழுதப்பட்டது.), இயேசுவை சிங்கம் போல படம்பிடித்துக் காண்பிக்கின்றது, இவரே மேசியாவாகும்.

(2) மாற்கு (ரோமர்களுக்கு எழுதப்பட்டது.), இது இயேசுவை எருது போல படம்பிடித்துக்காண்பிக்கின்றது. இவர் ஒரு ஊழியன் என்பதைக்கூறுகின்றது.

(3) லூக்கா (கிரேக்கருக்கு எழுதியது), இது இயேசுவை பூரணமனிதனாகப் படம்பிடத்துக் காண்பிக்கின்றது.

(4) யோவான் (முழ உலகிற்குமாக எழுதப்பட்டது), கிறிஸ்துவை கழுகைப்போல படம் பிடித்துக் காண்பிக்கின்றது. இது கர்த்தருடைய வல்லமையைக் காண்பிக்கின்றது ( சேரூபீன் என்பதற்கான விளக்கத்திற்கு  எசேக்கியா 6:1-7 பார்க்கவும் .)
**B.**  எசேக்கியேல் ஜீவிக்கின்ற தேவனின் வார்த்தைகளைக் கேட்டார். (2:1–3:27; 33:1-22).

1. அவர் இஸ்ரவேலின் காவற்காரனாக பாபிலோனில் ஊழியம் செய்தார்.

2. துஸ்ட மனிதர்களைத் தங்கள் பொல்லாத வழிகளிலிருந்து திரும்பினால், கர்த்தர் அவர்களை அழிக்கமாட்டார் என எச்சரிக்கை செய்தார்.

3. அவர் நீதியாக நடப்பவர்களை, நீதியின்வழிகளை விட்டுவிடாமல் வாழும்படி வேண்டிக் கொண்டார், அவர்கள் நீதியின் வழியை விட்டுவிலகினால் கர்த்தரினால் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரித்தார்.

4. பலர் இவையாவற்றையும் எதுவித பயமுமின்றிச் செய்தார்.

5. அவர் கர்த்தருடைய செய்திகள் யாவற்றையும் வாங்கிக் கொண்டார். (3:1, 2). (வெளி. 10:8-11.)

**II. கர்த்தருடைய நகரமாகிய எருசலேம்- பாழாக்கப்படல். (4-24).** கி.மு.605 இல் பாபிலோனிய முற்றுகை எருசலேம்மீது மேற்கொள்ளப்பட்டது. அந்த நேரத்தில் தானியேலும் மற்றும் அவரது நண்பர்களும் நாடுகடத்தப்பட்டார்கள். (தானி. 1:3, 4; 2 உபாக. 36:6, 7).

கி.மு. 597இல் யோயாக்கீன் அரசனும், எசேக்கியேலும் இன்னும் பலரும் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். (2 இராஜா. 24:10-16).

கி.மு. 586 இல் , யூதாவின் கடைசி அரசனாகிய சிதேக்கியாவும், சிறைப்பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டார், எருசலேமின் சுவர்களும் இடிக்கப்பட்டன, அத்துடன் ஆலயமும் நகரமும் கொளுத்தப்பட்டன. (2 ராஜா25:1-7). இந்த நிகழ்வுகள் எசேக்கியேல் 4-24 அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளது, இவையாவும் இரண்டாம், மூன்றாம் முற்றுகையின் போது இடம் பெற்றன. எருசலேமிலும், பாபிலோனிலும், பொய்த்தீர்க்கதரிசிகள் இருந்திருப்பது தெளிவாகவுள்ளன. அவர்கள் கர்த்தர் தன்னுடைய நகரத்தை ஒருபோதும் அழிக்கமாட்டார் என்று பொய்த்தீர்க்க தரிசனம் உரைத்துள்ளார்கள். ஆனால் எசேக்கியேல் தன்னுடைய தரிசனங்கள் மூலமாகவும், செய்திகள் மூலமாகவும், உவமைகள் மூலமாகவும் கர்த்தர் நகரத்தை அழிக்கப் போகின்றார் என்பதைக்கூறி மக்களை எச்சரித்துள்ளார்.

**A.** எசேக்கியேலின் பன்னிரண்டு அடையாளச் செயற்பாடுகள்.

1. இவர் மிருதுவான கழிமண்ணினால், எருசலேமின் நிலப்படத்தை ஒரு பெரிய மட்டமான பலகையில் வரைந்தார். அதில், நகரத்திற்கு எதிராக முற்றுகையிடப்பட்ட மலைகளைச் சுட்டிக்காட்டியிருந்தார். அதன்பின்பு அதிக விளக்கங்களையும் தந்துள்ளார் அத்துடன் சுற்றியுள்ள எதிரிகளின்கூடாரங்களையும் சித்தரித்துக் காண்பித்துள்ளார். இறுதியில் இரும்புத் தகட்டை வாங்கி அதை உனக்கும் நகரத்திற்கும் நடுவாக வைத்து அதை இரும்புச் சுவராக்கி விடும்படி வேண்டப்பட்டார். இது பாபிலோனியன் முற்றுகையை உடைத்து யாரும் தப்பமுடியாது என்பதைற்கான அடையாளமாகும். (4:1-3).

2. 390 நாட்களுக்கு இடது பக்கமாக ஒருக்களித்துப்படுத்துக் கொள், இது வடராஜ்ஜியத்தின் அக்கிரமத்திற்கான அடையாளமாகும், ஒவ்வொரு நாளும் ஒரு வருடத்திற்குச் சமமாகும். (4:4, 5).

3. பின்பு அவர் வலப்பக்கமாக ஒருக்களித்து நாற்பது நாட்களுக்குப்படுத்தார், இது யூதாவின் அக்கிரமத்திற்கான அடையாளமாகும், இங்கும் ஒவ்வொரு நாளும் ஒரு வருடத்திக்குச் சமமாகும். (4:6). இந்த முழுக்காலமும் நேரமும் தெரியாமலே இருக்கின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. அவர் தனக்குரிய அப்பத்தை தானியங்கள் கலந்து தயாரித்து, அதனை மாட்டுசாணியின் வறட்டியினால்நெருப்பிட்டு சுட்டு தயாரிக்க வேண்டும். இது எருசலேமில் உணவுக்கான பஞ்சம் ஏற்படுவதற்கான அடையாளமாகும். (4:9-17).

5. அவர் கூரிய கத்தியால் தன்னுடைய தலையையும் தாடியையும் சவரகம் செய்தார், பின்பு மயிரை மூன்று சம பகுதிகளாகப் பிரித்தார். (5:1-4).

a. அந்த மூன்றில் ஒருபகுதியை அவர் எரித்தார்.

b. அடுத்த மூன்றில் ஒன்றை அவர் கத்தியால் சிறிதாக வெட்டினார்.

c. மற்ற மூன்றில் ஒன்றை அவர் காற்றில் பறக்கவிட்டார்.

இவையாவும் யூதாவுக்கு என்ன நிகழப்போகின்றது என்பதற்கான அடையாளங்களாகும். எருசலேமுடைய முற்றுகையின்போது மூன்றில் ஒருபங்கு மக்கள் அக்கினியினால் சாவார்கள். அடுத்த மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாளினால் மடிவார்கள். மிகுதியாக இருப்பவர்கள் காற்றில் கலந்து போவார்கள்—அதாவது பிற தேசங்களுக்கு ஓடிப் போவார்கள்.

6. கையில் அடித்து, காலால் தட்டி, இஸ்ரவேல் வம்சத்தாருடைய சகல கவனத்தை ஈர்த்துக் கொண்டார். (6:11).

7. அவர் தன்னுடைய பிரயாணத்திற்குத் தேவையான பயணப்பைகளை வீட்டுக்கு வெளியே வைத்தார். பின்பு அவர் நகரத்தின் சுவரில் மாலைநேரத்தில் துவாரம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனூடாக அவர் தன்னுடைய பைகளை எடுத்துச் செல்லும் போது, தன்னுடைய முகத்தை மறைத்துக் கொண்டார். இது கீழ்காணப்படும் விடயங்களுக்கான அறிகுறியாகும். (12:1-16):

a. கொஞ்சப் பொருட்கள் என்பது சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் விரைந்து தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறுவார்கள்.

b. சுவரில் துளையிடுதல் என்பது, அழிந்த எருசலேமிலிருந்து நம்பிக்கையிழந்த நிலையில் வெளியேறுதலைக்குறிக்கின்றது.

c. மூடிய முகம் என்பது சிதேக்கியாவைக் குறிப்பிடுகின்றது, இவர் யூதாவின் கடைசி அரசனாவார், நேபுகாத்நேச்சாரால் இவரின் குற்றத்திற்காக இவரின் கண்கள் குருடாக்கப்பட்டது. இவர் பாபிலோனுக்கு கொண்டுசெல்லப்பட்டார். (2இரா. 25:1-7).

8. அவர் அப்பத்தை நடுக்கத்தோடே புசித்து, தண்ணீரைத் தத்தளிப்போடும் விசாரத்தோடும் குடித்தார் (12:17-20).

9. பட்டயம் கூர்மையாக்கப்பட்டது, அது துலக்கப்பட்டுமிருக்கிறது. (21:9-17).

10. (21:21, 22, tlb). மத்திய கிழக்கின் வரைபடத்தை எடுத்து பாபிலோன் அரசன் செல்லும் இரண்டு வழிகளைக் குறித்துக் கொள்வான், ஒருபாதை எருசலேமிற்கும், அடுத்தது ராபாத்-அம்மோனுக்கும் (Rabbath-Ammon.) செல்லும் பாதையாகும். இரண்டு நகரங்களும் நேபுகாத் நேச்சாருக்கு எதிராக கி.மு. 593இல் செய்தவையாகும். எசேக்கியேல் அரசனைக் குறுக்குத் தெருவில் காண்பிக்கிறார். எந்த நகரம் முதலில் அழிக்கப்படும்?. துக்கமான பதில் உடனடியாக கிடைத்தது.

(21:18-22): "அவர் தன்னுடைய மந்திரவாதிகளை சூனியம் பார்ப்பதற்காக அழைப்பான், அவர்கள் சீட்டுப்போடுவார்கள், அம்புகளை கூடையிலிருந்து குலுக்குவார்கள், அவர்கள் சுரூபங்களுக்கு பலியிடுவார்கள். அவர்கள் எருசலேம் நோக்கி முன்னேறுவார்கள். (21:21, 22,).

11. அவர் கொதிக்கிற நீரை பாத்திரத்திலிட்டு, அவற்றுக்குள் விருப்பமான இறைச்சித் துண்டுகளையிட்டு சமைத்தார், எலும்புகளிலிருந்து சதைகள் கழன்று போகும் வரை சமைத்தார். பின்பு பாத்திரம் காய்ந்து, அதின் களிம்பு வெந்து, அதற்குள் இருக்கிற அதின் அழுக்கு உருகி, அதின் நுரை நீங்கும்படி அதை வெறுமையாகத் தழலின்மேல் வை. அது மகா வருத்தத்தை உண்டாக்கியும், அதின் திரளான நுரை அதை விட்டு நீங்கவில்லை; அதின் நுரை அக்கினிக்கு உள்ளாகவேண்டியது. (24:1-14). இங்கு என்ன நடக்கப் போகின்றது என்பது தெளிவாகிவிட்டது. எருசலேமின் பணக்காரரையும், பெரிய மனிதர்களையும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் அக்கினியானது எரித்துப் போடும். குடியிருப்பாளர் சகலரையும் தேசத்திலிருந்து துரத்தப்படுவார்கள். அதுதான் பரிசுத்த நகரம் அதன் நுரை நீங்கவும், கறை அகலவும் சுத்திகரிக்கப்படல் வேண்டும்.

12. அவருடைய நேசிக்கப்பட்ட மனைவியின் திடீர் மரணத்தின் போது எந்தவித துக்கத்தையும் வெளியில் காட்ட வேண்டாம் என தடுக்கப்பட்டார். (**24:15-18**). ஆசாரியர்கள் தங்கள் கிட்டிய சொந்தக்காரருக்காக புலம்பலாம். (**லேவி. 21:1-3),** ஆனால் எசேக்கியேல் ஒரு விஷேசித்த நோக்கத்திற்காகத் தடுக்கப்பட்டுள்ளார். பழைய காலத்தின் வழமையின்படி மரணவீட்டு பண்டிகை கொண்டாடுதல் வழக்கமாகும். நண்பர்கள் உணவு சமைத்து அவர்களுக்கு கொடுப்பார்கள். இது துக்கத்திற்கான அடையாளமாகும். (உபாக. 26:14; எரே. 16:7; ஓசியா 9:4).

மிகவும் துக்கமான ஒரு வேதாகமத்தில் காணப்படும் வசனம்,: "விடியற்காலத்தில் நான் ஜனங்களோடே பேசினேன்; அன்று சாயங்காலத்தில் என் மனைவி செத்துப்போனாள்; எனக்குக் கட்டளையிட்டபடியே விடியற்காலத்தில் செய்தேன்." (24:18). கர்த்தர் அவரது மனைவியின் மரணம் குறித்து, துக்கம் கொண்டாடவேண்டாம் என்று அவருக்கு கட்டளையிட்டிருந்தார், எருசலேமின் மரணம் குறித்தும் துக்கம் கொணடாடவேண்டாம். அவரது மனைவி மரணமானது, நேபுகாத்நேச்சார் தன்னுடைய மூன்றாவது இறுதித்தாக்குதலைத் தொடுத்த அன்றேயாகும். (24:2).

**B. எசேக்கியேலுடைய பன்னிரண்டு நியாயத்தீர்ப்பின் செய்திகள்**.
எசேக்கியேலுடைய முக்கிய குறிப்புகள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

1. கர்த்தர் தன்னுடைய நாமத்தினிமித்தம் கிருபைசெய்து, தன்னுடைய கோபத்தை பின்தள்ளிக் கொண்டே சென்றார் (20:7-10, 14, 21, 22).
2. இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்? மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். (18:31, 32).
3. ஆனால் யூதா கர்த்தருடைய வாத்தைக்குச் செவி கொடுக்கவில்லை, அவர்கள் அழிவு சமீபித்து விட்டது. (7:6, 12).

4. யூதா அழிக்கப்படும், அவர்களுடைய தகப்பன்மார்களுடைய பாவத்தின் நிமித்தமல்ல, அவர்களுடைய சொந்தப் பாவத்தின் நிமித்தமாகும். (18:1-4, 20).

5. அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் ஆனால் எருசலேம் நகரத்தை அவர்களால் காப்பாற்ற முடியாது. (14:14, 20).

6. இஸ்ரவேலர்களின் இராணுவத்தால், தங்களைக் காப்பாற்றும் திறன் இல்லை. (7:14).

7. கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது. (7:19).
8. கர்த்தருடைய பரிசுத்த நகரம் சாத்தானுடைய வேசியின் நகரமாக மாறிவிட்டது.

9. புறஜாதிகளின் துஷ்டர்களை வரப்பண்ணுவேன், அவர்கள் இவர்களுடைய வீடுகளைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்; பலவான்களின் பெருமையை ஒழியப்பண்ணுவேன், அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் பரிசுத்தக்குலைச்சலாகும். (7:24).
10. யூதாவின் நகரங்கள் எரிக்கப்பட்டு சுரூபங்கள் உடைக்கப்படும். (6:4, 6).

11. நான் மனுஷரையும் மிருகங்களையும் நாசம்பண்ணும்படி எருசலேமுக்கு விரோதமாகப் **பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளைநோய்** என்னும் இந்நான்கு கொடிய தண்டனைகளையும் அனுப்புவேன் (14:21).

**C. எசேக்கியேலின் ஆறு உவமைகள்**.

1. கனியற்ற திராட்சைச் செடி (15:1-8).

a. திராட்சைச் செடியானது வேதாகமத்தில் காணப்படும் இஸ்ரவேலர்களுக்கான அடையாளமாகும். (உபாக. 32:32; சங்கீ. 80:8-12; ஏசாயா. 5:1-7; எரேமி. 2:21; ஓசியா 10:1; மத்தே. 21:33.)

b. திராட்சைச்செடியானது கனி கொடுக்கும் போதுதான் அதற்குப் பெறுமதியுண்டு. இது வீடுகட்டுவதற்குப் பயன்படுத்த முடியாது. ( அதன் தண்டு மிகவும் இளகியது, அல்லது தளபாடங்கள் செய்ய முடியாது, அல்லது விறகாக எரிக்கவும் முடியாது)

c. திராட்சைக்கு கொடுக்கப்பட்ட **கடமை கனி கொடுப்பதேயாகும்**, அது தன் கடமையைச் செய்யாத பட்சத்தில் அது எரிக்கப்படும். (யோவான். 15:6.)

**2. தத்தெடுக்கப்பட்டவள் வேசியாக மாறினாள். 16:1-63).**

a. கர்த்தர் ஒரு வயலில் கைவிடப்பட்ட நிலையில், மரணத்தறுவாயில் இருந்த சிறு பெண்பிள்ளையைக்கண்டார், அவளுடைய பெயர் இஸ்ரவேல் என்பதாகும். (16:1-5). நீ பிறந்த நாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய். நான் உன் அருகே கடந்துபோகும்போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து: பிழைத்திரு என்றேன்; ஆம், உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து: பிழைத்திரு என்று சொன்னேன். (யாத். 1:13, 14; 2:23; 3:7.)

b. இந்த கைவிடப்பட்ட பிள்ளையைக் கர்த்தர் தத்தெடுத்துக் கொண்டார், அவள் வயதிற்கு வந்தபோது, கர்த்தர் அவளுடன் பரிசுத்த விவாகத்தில் ஈடுபட்டார், அதனால் அவள் சட்டப்படி அவரின் மனைவியாகினாள். (16:8). இவையாவும் சீனாய் மலையில் கர்த்தருக்கும், இஸ்ரவேலுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்மூலம் ஏற்பட்டது. இது சீனாய்மலையில்வைத்து நிறைவேற்றப்பட்டது. ( யாத் . 19:5. எசேக். 16:9, எசேக். 19:14.)

c. அந்தத் திருமணத்தின்போது கர்த்தர் அழகான ஆடையினால் அவளை உடுத்துவித்தார். அதிகவிலையுயர்ந்த ஆபரணங்களினால் அவளை அலங்கரித்தார், அவளுக்கு தேவையான உணவுவகைகளையும் கொடுத்தார். (16:10-14). இவையாவும் தாவீதினதும் சாலொமோனினதும் ஆட்சிக்காலங்களில் இடம்பெற்றன. (2 சாமு. 8:11; 1 ராஜா. 3:13; 10:4-7.)

d. ஆனால் முன்பு அநாதையாக இருந்த இந்த பெண்பிள்ளை, அவருடைய அன்பையும், விசுவாசத்தையும் விட்டு விலகி, வீதிவழியில் காணப்படும் பொதுவான வேசியாக மாறினாள். (16:15-34).

e. இந்த சகிக்கமுடியாத செயற்பாடுகள் தண்டிக்கப்படாமலிருக்கவில்லை, ஏனெனில் அவளது நேசிக்கப்பட்ட கணவன் ஒரு நீதியான நியாயாதிபதியாகும். விபசாரிகளையும் இரத்தஞ்சிந் தினவர்களையும் நியாயந்தீர்க்கிறபடியே உன்னை நியாயந்தீர்த்து, உக்கிரத்தோடும் எரிச்ச லோடும் இரத்தப்பழியை உன்பேரில் சுமத்தி உன்னைத் தண்டிப்பேன். (16:36-41).

f. அவளுடைய தீவினை அவளுடை மூத்த சகோதரியான சமாரியாவை வென்றுவிட்டது (வடக்கு ராஜ்ஜியத்தின் தலைநகர்) அதைப்போல் இளைய சகோதரியையும் (9 சகோதரம்) வென்று விட்டது. உன் இடதுபுறத்திலே, தானும் தன் குமாரத்திகளுமாய்க் குடியிருந்த சமாரியா உன் தமக்கை; உன் வலதுபுறத்திலே, தானும் தன் குமாரத்திகளுமாய்க் குடியிருந்த சோதோம் உன் தங்கை. (எசேக். 16:46-50.)

g. அவளை அவர் துரத்திவிட்ட பிற்பாடு, மீண்டும் கர்த்தர் அவளைத் தனக்கென்று மீள்நிலைப்படுத்தினார், அவளுடன் இரண்டு சகோதரிகளையும் இணைத்துக் கொண்டார். காரணம், அவரது அன்பும், ஆபிராமுக்குக் கொடுத்த வாக்குறுதியுமாகும். (16:53, 60, 63).

3. **இரண்டு கழுகுகள்** (17:1-21). இந்த உவமையில் யூதாவினதும், பாபிலோனினதும், எகிப்தினுடையதுமான இவை கி.மு.597 இற்கும் 588 இற்கும் இடையில் நடந்த உலக விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன, குறிப்பிடப்பட்ட உருவங்கள் யோகாச்சீன், சிதேக்கியா, மற்றும் நேபுகாத்நேச்சார் ஆகியோரைக்குறிக்கின்றன. இந்த சரித்திரப்பதிவுகளைப் பார்ப்பதற்கு 2 ராஜா 24:8-20; 2 நாளாகமம், 36:9-13; எரேமியா37; 52:1-7 என்பவற்றை வாசிக்கவும்.

4. **இளம் கொழுந்து** (17:22-24).

a. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் உயர்ந்த கேதுருவின் நுனிக் கிளைகளில் ஒன்றை எடுத்து, அதை நடுவேன்; அதின் இளங்கிளையிலுள்ள கொழுந்துகளில் இளசாயிருக்கிற ஒன்றைக் கொய்து, அதை உயரமும் உன்னதமுமான ஒரு பர்வதத்தின்மேல் நாட்டுவேன். (17:22).

b. அது கொப்புகளை விட்டு, கனிதந்து, மகிமையான கேதுருவாகும்; அதின் கீழே சகலவித பட்சி ஜாதிகளும் தங்கி, அதின் கிளைகளின் நிழலிலே தாபரிக்கும். (17:23).

c. இந்த சம்பவங்களுக்கூடாக உலகம் முழுவதும் கர்த்தருடைய திட்டத்தையும் வல்லமையையும் அறிந்து கொள்வார்கள். (17:24).

d. இந்தவசனங்கள் சந்தேகமின்றி மேசியாவுக்கான தீர்க்கதரிசனத்தை அறிமுகம் செய்கின்றது. (ஏசா. 2:2-4; மீகா4:1-4.) இளம் துளிர் மேசியாவாகும் (ஏசாயா 11:1; 53:2; எரேமியா. 23:5, 6; 33:15; சகரியா. 6:12; வெளி. 22:16) உயரமான மலையானது சீயோன் மலையாகும். (சங்கீ 2:6.)

5. தாய்ச்சிங்கமும், அதன் குட்டிகளும். (19:1-9).

a. அவள் ஒரு பெண்சிங்கம், தன் குட்டிகளை வளர்த்தாள். தன் குட்டிகளில் ஒன்று வளர்ந்து, பாலசிங்கமாகி, இரைதேடப் பழகி, மனுஷரைப் பட்சித்தது. அது அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டது; அதைச் சங்கிலிகளினால் கட்டி, எகிப்துதேசத்திற்குக் கொண்டுபோனார்கள். (19:1-4).
b. அது தன் குட்டிகளில் வேறொன்றை எடுத்து, அதைப் பாலசிங்கமாக வைத்தது. அதுவும் மனுஷரைப் பட்சித்தது. அப்பொழுது சுற்றுப்புறத்து ஜாதிகள் அதற்கு விரோதமாக எழும்பிவந்து, தங்கள் வலையை அதின்மேல் வீசினார்கள்; அது அவர்களுடைய படுகுழியிலே அகப்பட்டது. அதைச் சங்கிலியால் கட்டி பாபிலோனுக்குக் கொண்டு சென்றார்கள். (19:8-9).

c. இந்த பெண்சிங்கத்தை யோசியாவின் மனைவியாகிய கமுத்தார்(Hamutal) என நம்புகின்றார்கள், மற்றும் யூதேயாவின் மூன்று ராஜாக்களின் தாயார் எனவும் நம்புகின்றார்கள். முதற்குட்டி யோகாகஸ் (Jehoahaz), (2இரா. 23:31-34) அவர் எகிப்தின் சிறைச்சாலைக்கு பார்வோன் **நீகோவினால்** (**Pharaoh Necho**) அழைத்துச் செல்லப்பட்டான். (2 ராஜா. 23:31-34) மற்றக்குட்டி சிதேக்கியா, கமுத்தாலுடைய (Hamutal's) கடைசிமகன், இவரே யூதாவின் இறுதி அரசனாவார். இவர் நேபுகாத்நேச்சாரால் பாபிலோனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.(2 ராஜா 24:18).

6. இரண்டு வேசிகள் சகோதரிகள். (23:1-49).

a. எகிப்தியர்களுடன் இணைந்து துர்நடத்தைகளில் ஈடுபட்டு இந்த இரண்டு சகோதரிகளும் தங்களின் துக்கமான சரித்திரமாகிய வேசித்தனத்தை ஆரம்பித்தார்கள். (23:1-3).

b. அவர்களில் மூத்தவளின் பெயர் **அகோலாள்,** அவளுடைய தங்கையின் பெயர் **அகோலிபாள்;** அகோலாள் என்பதற்குச் சமாரியா என்றும், அகோலிபாள் என்பதற்கு **எருசலேம்** என்றும் பொருளாம். (23:4).

c. அகோலாள் என்ற சொல்லிற்கான பொருள் "அவளின் கூடாரம் " என்பதாகும்—இது கர்த்தர் அவர்களுடையதான சமாரியாவின் (வட ராஜ்ஜியத்தின் தலைநகரம்) பொய்யான மதத்தை அங்கீகரிக்கவில்லை- அது அவர்களின் முதல் அரசனாகிய யெரோபெயமினால் ஆரம்பிக்க ப்பட்டதாகும் . (1 ராஜா. 12:25-33.)

d. அகோலிபாள் என்ற சொல்லின் அர்த்தம் "என்னுடைய கூடாரம் அவளிடம் உண்டு ," இது சிலவேளை கர்த்தரின் சமூகம் யூதாவின் பாவம் இருந்தபோதிலும் எருசலேமில் வாசம் செய்வதையும் குறிக்கின்றது.

e. இந்த இரண்டு சகோதரிகளும் எகிப்தியரின் துஷ்டதனத்தினால் வேசிகளாக மாறினார்கள். இது இரண்டு நகரங்களும் எகிப்தினுடைய அரசியல், மதசார்பான விடயங்களில் ஊக்கம் காண்பித்தன.

f. அகோலாள், தவறான உறவுகளை அசீரியாவுடன் மேற் கொண்டது. (23:5). இது வடராஜ்ஜியத்தின் அரசனாகிய மெனாகேம் கீழ் இடம்பெற்றது, இவர் அசீரியா தேசத்துடன் நட்புடன் இருந்தார். (2 ராஜா. 15:13-20.)

g. அகோலியாள் பாபிலோனுடன் அதேபால நட்புக் கொண்டாள். (23:11). பாபிலோனியர்களைத் தெய்வங்கள் மாதியாக எசேக்கியா உபசரித்தான். (2 ராஜா. 20:12-19; 2 நாளா. 32:31.)

h. ஆகையால் அவளுடைய சிநேகிதரின் கையிலே, அவர்கள் மோகித்திருந்த அசீரிய புத்திரரின் கையிலேயும் பாபிலோனின் கையிலேயும் அவர்களை ஒப்புக் கொடுத்தார். (23:9, 22, 24).

**D. எசேக்கியாவின் மேலதிகமான ஆலயத்திற்கான தேவதரிசனம் காணுதல். (8:1–11:25).**

1. கர்த்தருடைய கிருபை யூதாவைவிட்டு வெளியேறுதல்.

a. கி.மு. 592இல் எசேக்கியேல் தரிசனத்தில் பிடிக்கப்பட்டு பாபிலோனிலிருந்து எருசலேமிற்கு கொண்டு செல்லப்பட்டார். இங்கு அவர் எல்லாத் தரிசனங்களையும் சாட்சியாகக் கூறினார்.(8:1-3).

b. பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தேன்; நடையிலே எரிச்சலுண்டாக்குகிற அந்த விக்கிரகம் இருந்தது. (8:5).

c. அவர் ஆலயத்தின் வாசலிலே மறைவான அறையிலே, நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும் பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சூருபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந் தீட்டப்பட்டிருந்தன. இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய அசீக்காமுவும், அவனவன் தன் தன் கையிலே தன் தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள்; தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. முப்பது வருடங்களுக்கு முன்பாக எருசலேமின் பெரும் எழுப்புதலின்போது, சப்பான் நியாயப்பிரமாணத்தை யோசியாவுக்கு வாசித்தவராவார், அவர் இப்போது இருக்கும் நிலமையைப் பார்த்து எசேக்கியேல் விறைத்துப்போயிருந்தார். (2 ராஜா. 22:8-11). ஆனால் இப்போது அவன் எதிராகச் செயற்படுகின்றான். (எசேக். 8:7-11). அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். (ரோமர். 1:21-23.)

d. என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டு போனார்; இதோ, அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள். (8:14). தம்மூஸ் மத வணக்கம் அருவருக்கத்தக்க வாசிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

1) ஏறக்குறைய இருபத்துநான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு, சாத்தானுக்கான ஆலயம் பாபேல் கோபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஆதி. 11:1-9. இங்கு வளமான தேசமாகிய சீனார், இது உண்மையான ஏதோன் தோட்டத்திற்கு அருகிலுள்ளது, முதலாவதாக பிசாசின் வணக்கத்தினை ஏற்படுத்தியது.

(2) சாத்தான் வணக்கத்துக்குரிய முதலாவது முழுநேர ஊழியக்காரன் **நிம்ரோத்தாகும்**. இவர் நோவாவின் பேரப்பிள்ளையாவார். (ஆதி. 10:8-10).

(3) நிம்ரோத் தன்னைப் போல ஒரு அசுத்த வல்லமை கொண்ட பெண்ணையே திருமணம் செய்ததாக சரித்திரம் கூறுகின்றது. அவளுடைய பெயர் செமறிமஸ் (Semerimus) என்பதாகும். எதிர்வரப்போகும் இரட்சகருக்கான வாக்குறுதியை அறிதல்வேண்டும்.(ஆதி. 3:15), செமறியஸ் தன்னுடைய மகன்தான் இரட்சகர் என்று கூறி தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று கூறினாள்.

(4) செமறியஸ் தங்களுக்கென்று ஒரு புதிய மதவழிபாட்டை ஆரம்பித்து தன்னையும்தனது மகனையும் ஆராதிப்பதற்கு ஏற்பாடு செய்தாள். அவளே அதற்குப் பிரதான ஆசாரியரானாள். அதுவே , அம்மாவும் மகனும் என்ற வழிபாட்டு முறைமையை ஏற்படுத்தினாள். இது பின்பு உலகம் எங்கும்பரவியது.

**(5) செமறிமஸ் சாத்தானுடைய ஆலயத்தின் போதனை என்ன?**

(a) செமறிமஸ் தானே கர்த்தரிடம் சேர்வதற்கான வழியாகும். அதனாலேயே அவளுக்கு "**வானராக்கினி**" என்ற பெயரும் வந்தது.

(b) தன்னால் மட்டுமே பாவிகளுக்கான இரட்சிப்பைக் கொடுக்கமுடியும் என்றும் பலதரப்பட்ட புனிதச் சடங்குகள் மூலம் அதாவது பரிசுத்த ஜலம் தெளித்தல் மூலம் இதனைச் செய்கிறார்,

(c) தன்னுடைய மகன் தம்மூஸ் வேட்டைக்குப் போகும்போது காட்டுப்பன்றியினால் பரிதாபமாகக் கொல்லப்பட்டார்.

(d) அதன்பின்பு அவர் நாற்பது நாட்களின்பின்பு உயிர்த்தெழுந்தார். இதன்பின்னு நாற்பது நாள் ஞாபகார்த்தமாக தம்மூஸ் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் கொண்டாடுகிறார்கள்.

(e) நாற்பது நாள்கள் உபவாசத்தின்பின்பு, சந்தோஷமான **ஈஸ்ரர்** என்னும் பண்டிகை கொண்டாடப்படும். இந்தப்பண்டிகையில் வர்ணநிறமுள்ள முட்டைகள் உயிர்த்தெழுதலின் அடையாளமாகப் பரிமாறப்படும். பச்சையான மரம் பார்வைக்கு வைக்கப்பட்டு,**கிறிஸ்மஸ்** பண்டிகைக்கு முதல்நாள் அந்த மரக்குத்தி எரிக்கப்படும். அதன்பின்பு கேக் செய்யப்பட்டு தம்மூஸ் என்பதற்கான அடையாளமாக *"T"* என்ற எழுத்து பொறிக்கப்படும். இது எல்லாராலும் சாப்பிடப்படும். எரேமியா இந்த அசுத்த மதம்பற்றிக்குறிப்பிட்டுள்ளார். (எரே. 7:18; 44:25.)

**e. எரேமியா தன்னுடைய பிரயாணத்தைத் தொடருகின்றார், இருபத்தைந்து மனிதர்கள் தங்கள் பின்புறத்தை ஆலயத்திற்குக் காண்பிப்பதை எரேமியா பார்க்கின்றார்**. அவர்கள் கிழக்கை நோக்கிப் பார்த்து சூரியனை ஆராதிக்கின்றார்கள். (8:16)

உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்து மாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். (உபா. 4:19) வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக் கிறது. (சங் 19) இந்த இருபத்தைந்து நபர்களும் சூரியனை வணங்குவது கர்த்தரை அவமதிப்பது போன்றதாகும். அதுமட்டுமல்லாமல் கர்த்தருடைய ஆலயத்திற்கு தங்கள் முதுகைக் காண்பிக் கின்றார்கள். இதுவும் அவருக்கத்தக்க செயலாகும்.

f. இந்தச் செயற்பாடானது மிகவும் அருவருக்கப்படத்தக்கதாகும். பின்பு அவர் என் காதுகள் கேட்க மகா சத்தமாய்: நகரத்தின் விசாரிப்புக்காரர் சங்கரிக்கும் ஆயுதங்களைத் தங்கள் கைகளில்

பிடித்துக்கொண்டு வரக்கடவர்கள் என்று சொன்னார். அப்பொழுது இதோ, ஆறு புருஷர், வெட்டுகிற ஆயுதங்களைத் தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு, வடக்கே பார்த்த உயர்ந்த வாசலின் வழியிலிருந்து வந்தார்கள்; அவர்களில் சணல்நூல் அங்கிதரித்து, தன் அரையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற ஒருவன் இருந்தான்; அவர்கள் உள்ளே பிரவேசித்து, வெண்கல பலிபீடத்தண்டையிலே நின்றார்கள். இந்த தேவதூதரின் தலைவன் பதிவுகளை மேற் கொள்பவனாக இருந்தான், இவன் ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதுபவராகும். (யாத். 32:32; சங். 69:28; 139:16; ஏசாயா. 4:3; தானி. 12:1; பிலிப். 4:3.)

g. கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப் படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்(9:3, 4). அவர்கள்மீது அப்படி அடையாளமிடப்பட்டது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவாகும். (வெளி 7:1-3; கலாத்தி. 6:17; வெளி. 13:16-18; 14:1; 2 திமேத். 2:19.)

h. வாள்வைத்துக் கொண்டிருந்த தூதர்கள் இந்த தலைவரைப்பின்பற்றிச் சென்று, நெற்றிகளில் அடையாளமிடப்படாதவர்கள் யாவரையும் வெட்டிக் கொன்றார்கள். (9:5-11). ஆலயத்திலிருந்தே இது நிறைவேற்றப்பட்டது. இவ்வாறாகவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தொடங்கும். (1 பேது. 4:17.)

i. எசேக்கியேல் எருசலேமிற்காக ஜெபம் செய்தார். சோதோமிற்கு எதிராக ஆபிரகாம் செய்தது போல ( ஆதி. 18:23-33 எசே. 9:8), ஆனால் இதன் நிலமை ஜெபம்செய்யும் நிலமையைத் தாண்டிச் சென்றுவிட்டது. (9:8-10).

j. யூதாவின் தலைவர்கள் கர்த்தரால் கொடுக்கப்பட்ட எச்சரிக்கைள் யாவற்றையும் புறந்தள்ளி விட்டார்கள். அவர்கள் தாங்கள் ஏற்கனவே கைதிகளாக்கப்பட்டுவிட்டதாகத் தங்களைத் தாங்களே சரிசெய்தார்கள். இவர்களுள் தானியேலும், எசேக்கியேலும் அடங்குவார்கள். இவர்களின் பாவங் களின் நிமித்தமாக இவர்கள் கைவிடப்பட்டார்கள். (11:14, 15).

**2. கர்த்தருடைய மகிமை யூதாவை விட்டுவெளியேறுதல்.**

a. எசேக்கியேல் கர்த்தருடைய மகிமையின் மேகத்தை கிருபாசனத்தின்மீது கண்டார். (9:3).

b. பின்பு இது ஆலயத்தின் கதவருகே வந்து நின்றது. (10:4).

c. அங்கிருந்து அது நகர்ந்து கிழக்கு வாசல்வரை சென்றது. (10:18, 19).

d. கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்தெழும்பி, நகரத்துக்குக் கிழக்கே இருக்கிற மலையின்மேல் போய் நின்றது. (11:23). கர்த்தருடைய மகிமை இஸ்ரவேலை விட்டு வெளி யேறிவிட்டது (1 சாமு . 4:22.). தேவனுடைய பெட்டி பிடிபட்டு, அவளுடைய மாமனும் அவளுடைய புருஷனும் இறந்துபோனபடியினால், அவள்: மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று என்று சொல்லி, அந்தப் பிள்ளைக்கு இக்கபோத் என்று பேரிட்டாள் அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ய நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்து, கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன் . அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன். (11:17-20.)

III. கர்த்தருடைய எதிரிகள் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படுவார்கள். (25:1–32:32; 35:1-15).

**A. அம்மோன். (25:1-7).**

1. அம்மோன் (யூதாவின் கிழக்குப்பகுதியும், மோவாப்பினுடையதெற்குப் பகுதியும் பிடித்துள்ளார்கள்) லோத்துவின் இளையமகளுடன் தொடர்பு கொண்டு உருவாகிய பரம்பரையின் தான் இந்தப் பரம்பரையினராவார்கள். (ஆதி. 19:38.)

**2.** அம்மோன் தன்னுடைய பகமையை யூதாவின்மீது காட்டுகின்றார்கள். (2 சாமு. 10; ஆமோஸ். 1:13-15.) கி.மு. 600இல் பாபிலோனியர்களுடன் இணைந்து யூதாவுக்கு எதிராகச் செயற்பட்டது. (2 ராஜா. 24:2) இதற்கு முன்பாக, அசீரியன் சிறையிருப்பிற்குப் பிற்பாடு காத் கோத்திரத்திரத்தின் எல்லைகளை முற்றுகையிட்டது. (எரேமி 49:1).

**3. அம்மோனுடைய பிரதான பாவம்.,**

வழிப்போக்கர் யாவரும் உன்பேரில் கை கொட்டுகிறார்கள்; எருசலேம் குமாரத்தியின்பேரில் ஈசற்போட்டு, தங்கள் தலைகளைத் துலுக்கி: பூரணவடிவும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான நகரம் இதுதானா என்கிறார்கள் என்று சொல்லபடுவதுபோல எருசலேமை அழித்தார்கள். அதின் ஜனங்களை அழித்தார்கள், அனேகரை அடிமைகளாக்கினார்கள். (புலம். 2:15).

**4.** இதன் காரணமாக அனேக வனாந்தர கோத்திரங்கள் எருசலேம்மீது பிரச்சனைகளைக் கொடுத்தார்கள், அவர்களுடைய தலைநகராகிய ரப்போத், (தற்கால அம்மோன் நகரம்) ஒட்டகங்களின் மேய்ச்சல் நிலமாக மாறியது.

**B. மோவாப் (25:8-11).**

1. இந்த சந்ததி லோத்துவுக்கும் அவருடைய மூத்த மகளுக்கும் பிறந்த சந்ததியாகும். அவருடைய பிள்ளைக்கு மோவாப் என்று பெயரிட்டான். (ஆதி. 19:37).

2. இவர்களுடைய முக்கிய பாவம், யூதாவின் தேவனாகிய யேகோவா வேறு கோத்திரத்தாரினதும் தேசத்தினதும் கர்த்தர் என்று தரக்குறைவாக எண்ணினார்கள்.

3. இவர்கள் கூறியது போன்ற பாலைவனக் கோத்திரத்தார், அம்மோனை மேற் கொண்டது போல மோவாப் நகரத்தையும் கைப்பற்றினார்கள்.

**C. ஏதோம். (25:12-14; 35:1-15).**

1. இவர்கள் ஏசாவிலிருந்து உருவாகின கோத்திரத்தாராவார்கள். இவருடைய சகோதரன் யாக்கோபு ஆகும்.(ஆதி. 25:33). ஒரே பரம்பரையிலிருந்து வந்தபடியால், இஸ்ரவேலர்கள் ஏதோமியர்களுடன் யுத்தம் செய்வதில்லை. (உபாக 23:7). ஏதோமியர்கள் மோவாப்பின் தெற்குப்பக்கத்திலுள்ள சவக்கடலுக்கு அருகிலுள்ள அக்காபா என்ற குடாவில் குடியிருந்தார்கள்.

2. ஒரே பரம்பரையிலிருந்து வந்தவர்களாய் இருந்த போதிலும், ஏதோம் இஸ்ரவேலர்களின் கசப்பான எதிரிகளாகக் கருதப்பட்டார்கள். நீ உன் சகோதரனாகிய யாக்கோபுக்குச் செய்த கொடுமையினிமித்தம் வெட்கம் உன்னை மூடும்; நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப்போவாய். (ஒபதியா. 1:10; மல்கியா. 1:2-5.)

3. அவர்களுடைய பாவங்கள் பலவகையானவை.:

a. அவர்கள் யூதா விழுந்தபோது மகிழ்ச்சியடைந்தார்கள். (சங்கீ. 137:7; புலம். 4:21, 22; ஒபதியா. 1:10-14). எசேக்கி 35:15.

b. பாபிலோனியர்களின் முற்றுகையின் போது உதவியற்ற யூதர்களைக் கொன்றார்கள். (35:5).

c. அவர்கள் முழுப் பாலஸ்தீனத்தையும் கைப்பற்றி கர்த்தரை அங்கிருந்து கலைக்க முயற்சித்தார்கள். (35:10).

4. கர்த்தர் அவர்களைத் தண்டிப்பதற்குப் பலதரப்பட்ட தேசங்களை உபயோகித்து ஏதோமியர்களின் பிணத்தினால் தேசத்தை நிரப்பினார். (35:5-9).

D. **பெலிஸ்தியா** (25:15-17).

1. இஸ்ரவேல்களின் எதிரியாக முதலிடத்தில் இருக்குமானால், இரண்டாம் இடத்தில் பெலிஸ்தியா கட்டாயம் இருக்கும்.

2. தாவீதின் ராஜ்ஜியம் வரும்வரையில் இஸ்ரவேல் ஒடுக்கப்பட்டும், அடக்கப்பட்டது தொடந்து பிரச்சனைகளைச் சந்தித்துக் கொண்டேயிருந்தது. (1 சாமு. 13-14.)

3. உக்கிரமான தண்டனைகளினால் அவர்களில் கொடிதாய்ப் பழிவாங்குவேன்; நான் அவர்களில் பழிவாங்கும்போது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (25:17).

E. தீரு (26:1–28:19).

1. தீருவின் சரித்திரம்.

a. தீரு ஒரு பழைய நகரமாகும், யோசுவாவின் புத்தகத்தில் இது முதன்முதலாக்க் கூறப்படுகின்றது. 19:29. இது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் புகழ்வாய்ந்த வியாபார நகரமாகும். தீரு என்பதன் பொருள் பாறை என்பதாகும். இது மத்திய தரைக்க கடற்பரப்பில் உலகத்தின் மைய நகரமாகும்,

b. எசேக்கியேல் (26:13), ஏசாயா (23:16) ஆகிய புத்தகங்களின் பிரகாரம், தீரு சங்கீதப் பிரியர் களின் நகரம் என்று அழைக்கப்படுகின்றது, அத்துடன் வாத்தியங்கள் வாசிப்பவர்களும் அங்கு அனேகர் இருந்தார்கள்.

c. தாவீதின் காலத்திலும் சாலொமோனின் காலத்திலும் நகரம் அதிகமான உதவிகளை நாடியது, ஈராம் தீருவின் அரசன் தாவீதின் உண்மையான நண்பனாகும். (2 சாமு. 5:11). பிற்பாடு இவர்

தாவீதிற்கும் சாலொமோனுக்கும் ஆலயம்கட்டிட வேலைகளில் உதவிகளைச் செய்தார். (1 ராஜா. 5:1-12; 1 நாளா. 14:1; 2 நாளா. 2:3, 11).

d. உண்மையில் தீரு என்பது இரண்டு நகரங்களாகும், ஒன்று கடற்கரைப்பகுதிகளில் உள்ளது, மற்றது எருசலேமிலிருந்து அறுபது மைல்கள் வடமேற்குப்பகுதியில் உள்ளது. இது மத்திய தரைக் கடலிலிருந்து அரைமைல் தூரத்தில் உள்ளது.

e. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் காலத்தில் தீருவின்குடிகள் பாபிலோனுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

**2. தீருவின் பாவங்கள்**.

a. யூதா விழுந்தபோது தீரு சந்தோஷப்பட்டது. (26:2). எகிப்திலிருந்து தெற்குக்குப் போகும் வாகனங்கள் வரிக்கட்டணமின்றிச் செல்வதற்கான காரணத்தினாலேயே அவர்கள் சந்தோசப் பட்டார்கள்.

b. அவர்கள் யூதர்களை அடிமைகளாக கிரேக்கருக்கும் ஏதோமியர்களுக்கும் அடிமைகளாக விற்கிறார்கள். (யோவேல் 3:4-8; ஆமோஸ் 1:9, 10).

(1) இந்த காலத்தில் ஆட்சியாளனாக இத்தாபோல் II என்பவர் இருந்தார் அவர் தான் ஒரு கடவுள் போல இருப்பதாக (28:2, 3). அவருடைய பெருமையே அவரின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். சனச்கெரிப்பினுடையதும் (2 இராஜா.. 18:33-35), நேபுகாத்நேச்சாருடையதும் (தானி. 3:15; 4:30), எரோதினுடையதும் (அப் 12:21-23) உதாரணத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

(2) தீருவின் ஆட்சியாளன் கர்த்தரைப்போல் வரவிரும்பியது அந்திக்கிறிஸ்த்துவின் மாதியாக கூறப்படுகின்றது. (2 தெச. 2:4.)

c. பொருளாசையினால் நகரம் கெட்டுப் போயிருந்தது. (27:4-25).

**3.** தீருவின் தண்டனை.

a. பலநாடுகள் கடல் அலைகளைப்போல தீருவுக்கு எதிராகப் புரண்டு வந்தன. (26:3).

(1) கி. மு 701—969 வரையுள்ள காலத்தில் அசீரியாவாகிய சனக்கெரிப், நகரத்தின் முக்கிய நகரங்கள் வரை வந்தான், ஆனால் அவரால் உள்நாட்டுக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை.

(2) பாபிலோனின் அரசனாகிய நோபுகாத்நோச்சார் இரண்டு நகரங்களையும் கைப்பற்றுவதற்குப் பதின்மூன்று வருடங்களாக முயற்சி செய்தார், ஆனாலும் அவரால் முடியவில்லை. (கி.மு. 585-573.)

b. தண்ணீரின் பாதுகாப்பு இருந்தபோதிலும், அவர்கள் தீருவின் மதில்களை அழித்து, அதின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள்; நான் அதின் மண்ணும் அதில் இராதபடிக்கு விலக்கிப்போட்டு, அதை வெறும் பாறையாக்கிவிடுவேன். அது வலைகளை விரிக்கிற இடமாகச் சமுத்திரத்தின் நடுவிலே இருக்கும்; நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; அது ஜாதிகளுக்குக் கொள்ளையாகும். என்று எசேக்கியேல் கர்த்தருடைய வார்த் தையை முன்னறிவித்தார். (26:4, 5). 225 வருடங்களாக தீர்க்கதரிசம் நிறைவேற்றப்படாமல் இருந்தது. ஆனால் கி.மு 332இல், மகா அலெக்ஸ்சாந்தர் வந்து நகரத்தை அழித்துப் போட்டார். அவர் கடற்கரையிலிருந்து நாட்டிற்கு ஒரு பாலத்தைக் கட்டினான், இதனால் நகரம் நீரிற்குள்

அமிழ்ந்தது. இதனால் நகரம் சுத்திகரிக்கப்பட்டது. தீருவின் அழிவுகளை தோண்டிப் பார்த்த அமெரிக்கன் தொல்பொருள் நிபுணர்கள் நிலத்தின் ஆழத்தில் பழைய கட்டிட அழிவுகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஏழுமாத முற்றுகைக்குப்பின்பு, அலெக்சாந்தர் தேசத்தைப்பிடித்து முற்றுமாக அழித்துப் போட்டார். இதன் பிற்பாடு அந்த இடம் மீன்படிக்கும் இடமாக மாறியது.

c. இந்ததேசம் இனிமேல் குடியேற்றப்படாது என எசேக்கியேல் கூறியிருந்தார். (26:20, 21). தீரு மீண்டும் புணர்நிர்மாணம் செய்யப்படவில்லை,

d. அவர்களுடைய அனேக கப்பல்கள் சூறாவளியினால் அழிக்கப்பட்டன. (27:26, 27).

e. இந்த தேசத்தின் அழிவிற்காக மேலைத்தேய நாடுகள் புலம்பின. (26:16-18; 27:28-36). உபத்திரப காலத்தின்போதும் இவ்வாறாகவே பாபிலோனும் அழிக்கப்படும். (வெளி. 18.)

4. தீருவுக்கு எதிராக தீய சக்தியொன்று செயற்பட்டுள்ளது. (28:11-19).

a. **இந்த சக்தியை அடையாளம் காணுதல்**.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது போல எசேக்கியேல் 28:1-10 இதாபோல் II (Ithobal), தீருவின் அரசன் பற்றியும் அவரது பெருமைபற்றியும் விபரிக்கின்றது. ஆனால் இப்போது உலகப் பார் வைக்குப் அப்பால் சென்று மனிதவர்க்கமற்ற தேவதூதர்களின் படைப்பு பற்றிய பார்வைக்குச் செல்வோம். இந்த அழகான படைப்பு சாத்தானாகும், தீருவின் துஸ்டத்தனங்களுக்குப் பின்னால் நின்று செயற்படுபவன் அவனேயாகும். கர்த்தர் வேறு விதமான மறைமுகமான வகையில் அவனோடு அடிக்கடி பேசுவார், உதாரணமாக

(1) அவர் பாம்பினூடாகப் பிசாசுடன் பேசினார். (ஆதி. 3:14, 15).

(2) அவர் சீமோன் பேதுருவுக்கூடாகப் பிசாசுடன் பேசினார். (மத். 16:23).

b. இந்த சக்தியினுடைய குணாம்சங்கள்.

(1) சிறந்த ஞானமும் அழகுமுள்ளவன். (வ. 12). எந்த மனுஷனும் இவ்வாறு கூறப்படுவதில்லை, ஆனால் எதிர்மாறாக்க் கூறப்படுகின்றார்கள். (ரோம. 3:23.)

(2) அபிஷேகம் பண்ணப்பட்ட காவலாளியாகிய சேரூபீம். (வ. 14).

(a) பழைய ஏற்பாட்டில் அவனே அபிஷேகம் பண்ணப்பட்டவனாக இருந்தான். மூன்று விதமான அபிஷேகங்கள் உண்டு, அவையாவன தீர்க்கதரிசிக்கானது, ஆசாரியனுக்கானது, மற்றது அரசனுக்குரியது. உண்மையில் லுசிபரானவன் கிறிஸ்த்துவின்கீழ் பரலோக தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும் மற்றும் அரசனாகவும் செயற்படுவதற்காகவே உருவாக்கப்பட்டவனாகும். ஆனால் அவன் அவ்வாறு செயற்படவில்லை. இதன்காரணமாகவே, கர்த்தர் அந்த மூன்று அபிஷேகத்தையும் புறம்பாக்கினார். (1 சாமு. 13; 2 நாளா.26.)

(b) அவர் காவலாளியாகிய சேரூபீனாக இருந்தார். ஒருசேரூபின் என்பது விஷேட கடமைக்காக உருவாக்கப்பட்ட தேவதூதனாக உருவாக்கப்பட்ட உயிரினமாகும். இவர் உருவாக்கப்பட்டதன் நோக்கம் கர்த்தருடைய பரிசுத்தத்தைப் பாதுகாப்பதற்காகவாகும். (ஆதி. 3; யாத். 25; 1 ராஜா 6; எசேக். 1; வெளி. 4.)

இவர்கள் சிங்கம், எருது, கழுகு, மற்றும் மனித அவதாரங்களை எடுக்கக்கூடியவராக இருப்பார்கள் என வேதாகமச் சாட்சிகளும் புதைபொருள் ஆராய்ச்சிகளும் கூறுகின்றன. உண்மையில் லூசிபர் உருவாக்கப்பட்டது, கிறிஸ்த்துவின் உலக வேலைகளை விளங்கப்படுத்துவதற்காகவாகும். நான்கு சுவிஷேசக எழுத்தாளர்களும் இதனை விளக்கியுள்ளார்கள். **மத்தேயு**—கிறிஸ்துவை சிங்கமாகக் காண்பிக்கின்றார். **மாற்கு**—கிறிஸ்த்துவை எருதுவாகக் கூறுகின்றார். **லூக்கா**—கிறிஸ்த்துவை மனிதனாகக் காண்பிக்கின்றார். **யோவான்**—கிறிஸ்த்துவை கழுகாக் காண்பிக்கின்றார்.

(5) உன்னுடைய அழகினாலே உன் இருதயம் பெருமை கொண்டது. (வ. 17). இதில் முதலாவது பாவம் உருவாக்கப்பட்டது.

**F. சீதோன். (28:20-24).**

1. சீதோன் தீருவின் வடக்குப்பக்கமாக இருபதுமைல் தொலைவில் உள்ளது, அத்துடன் கானானின் முதற் பிள்ளையால் உருவாக்கப்பட்டதாகும். (ஆதி. 10:15).

2. இந்த நாடுதான் பாகால் சுருபத்தின் மையகமாகும். எசேபேல் இளவரசி, வேதாகமத்தில் குறிப்படுகின்ற மிகவும் மோசமான பெண், சீதொனின் பாகால் ஆராதனைக்காரியாகும். (1 ராஜா. 16:31-33.) அத்துடன் தம்மூஸ், அஸ்த்தரோத்து வணக்கத்திற்கும் சீதோன் மத்திய நிலையமாக இருந்தது.

3. இந்த படுமோசமான நிலமையினால், சீதோன் இஸ்ரவேலர்களுக்கு குத்தும் முள்ளாகவே இருந்தது.

4. கர்த்தர் இந்த தேசத்தை அழிப்பதற்காக பயங்கர கொள்ளை நோயையும், இராணுவத்தையும் அனுப்பி சங்கரித்தார், இது கி.மு. 351 இல் இடம்பெற்றது. .

**G. எகிப்து (29:1–32:32).**

1. சரித்திரத் தண்டனை (நேபுகாத்நேச்சாரினால்.).

a. எகிப்தினுடைய பாவம் மற்ற நாடுகளைப் போல பெருமை கொள்ளுதல். (29:3).

b. பார்வோன் கொப்பா (எசேக்கியேல் 29 காலப்பகுதியின் அரசன்.) இருபத்தாறாவது அரசபரம்பரையினர், யூதாவின் ராஜாவாகிய செதேக்கிய, நேபுகாத்நேச்சாரை எதிர்ப்பதற்கு கர்த்தரைவிடச் சிறந்தவர் என நம்பினான். (29:6). (30:21-26.)

c. பார்வோன்மீதும், மக்கள்மீதும், மிருகங்கள் மீதும் எசேக்கியேல் அழிவை முன்னறிவித்தார். (29:8-12).

d. அதிகாரம் 31 இல் எகிப்து லெபனானின் மரங்களைக் கொண்டுள்ளதாக கூறுகின்றது. ஆகாயத்துப்பறவைகள் அதன் கிளைகளில் தங்கின, மிருகங்கள் அதன் நிழலில் தங்கின, ஆனால் விரைவில் அந்த மரங்கள் பெருமையினால் தங்களைக் கெடுத்துக் கொள்ளும், அதனால் கர்த்தர் பாபிலோனியர்களின் மரம் வெட்டுபவர்களினால் இந்த மரங்களைத் துண்டுதுண்டாகத் தறித்துப்போடுவார்.

e. எகிப்தை நேபுகாத்நேச்சார் வெற்றி கொண்டுவிட்டதாக எசேக்கியா அறிவிக்கின்றார். எகிப்தின் செல்வங்கள் எல்லாம் தீருவை வெற்றி கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்ட

முற்றுகைக்குப் பயன்படுத்தப்பட்டது. அதின் கொள்ளைப்பொருளை எடுத்துக்கொள்வான்; இது அவனுடைய சேனைக்குக் கூலியாயிருக்கும். (எசேக்.29:17-21).

f. எகிப்து நாற்பது வருடங்கள் பாழாக்கப்பட்டது. (29:9, 11) இதோ, நான் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு எகிப்துதேசத்தைக் கொடுக்கிறேன்; அவன் அதின் ஏராளமான ஜனத்தைச் சிறைபிடித்து அதின் ஆஸ்தியைச் சூறையாடி, அதின் கொள்ளைப்பொருளை எடுத்துக்கொள்வான்; g. நாற்பது வருட தண்டனைக்குப்பிற்பாடு, எகிப்து மீண்டும் மீள்நிலைப்படுத்தப்பட்டது. ஆனால் எப்போதும் அது சிறிய ஒரு ராஜ்ஜியமாக இருந்தது. (எசேக். 29:13-15).

h. இஸ்ரவேல் எகிப்தின்மீது நம்பிக்கை கொள்ளவில்லை. (29:16).

2. எகிப்திற்கான எதிர்கால தண்டனைகள். (30:1-19).

a. இந்தப்பகுதியில் நேபுகாத்நேச்சாரின் பெயர் மீண்டும் காணப்படுகின்றது, (v. 10), இது இறுதி நியாத்தீர்ப்பாகக் கூறப்பட்டிருந்த போதிலும் இது உபத்திரப காலத்திலேயே இடம்பெறும். “கர்த்தருடைய நாளில்” இது இடம்பெறும் என்று தீர்க்கதரிசன வார்த்தை உபயோகத்தில் எசேக்கியேல் கூறியுள்ளார். நாள் சமீபமாயிருக்கிறது; ஆம், கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது மந்தாரமான நாள், அது புறஜாதிகளுக்கு வரும் காலம். (வசனம். 3). இந்த வார்த்தைகள் ஏழுவருட உபத்திரப காலத்தைக் குறிக்கின்றது. (எசாயா13:6, 9; யோயேல் 1:15; 2:1,11; 3:14; ஆமோஸ் 5:18; ஒபதியா. 1:15; செப்பனியா 1:7, 14; சகரியா 14:1; 1 தெசலோ 5:2; 2 தெசலோ 2:2; 2 பேது 3:10.)

b. தானியேல் 11:40-43இன் படிஎகிப்து உண்மையிலே உபத்திரப காலத்தில் முற்றாக அழிக்கப்படும்.

c. அந்த காலத்தில் எகிப்து கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை அனுபவிக்கும். (30:4-17.) இந்தப் பகுதியை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு, எசேக்கியேலின் 32:17-21இல் உள்ள வார்த்தைகளை நன்கு அவதானித்தல் வேண்டும். மனுபுத்திரனே, நீ எகிப்தினுடைய ஏராளமான ஜனத்தினிமித்தம் புலம்பி, அவர்களையும் பிரபலமான ஜாதிகளின் குமாரத்திகளையும் குழியில் இறங்கினவர்கள் அண்டையிலே பூமியின் தாழ்விடங்களில் தள்ளிவிடு. மற்றவர்களைப்பார்க்கிலும் நீ அழகில் சிறந்தவளோ? நீ இறங்கி, விருத்தசேதனமில்லாதவர்களிடத்தில் கிட. அவர்கள் பட்டயத்தால் வெட்டுண்டவர்களின் நடுவிலே விழுவார்கள், பட்டயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; அவளையும் அவளுடைய ஜனத்திரள் யாவையும் பிடித்திழுங்கள். பராக்கிரமசாலிகளில் வல்லவர்களும், அவனுக்குத் துணை நின்றவர்களும், பாதாளத்தின் நடுவிலிருந்து அவனோடே பேசுவார்கள்; அவர்கள் விருத்தசேதனமில்லாதவர்களாய்ப் பட்டயத்தால் வெட்டுண்டு, இறங்கி, அங்கே கிடக்கிறார்கள். இவர்களுடன் அழிவிற்கிடக்கும் நாடுகள் சில அசீரியா போன்றவர்கள், ஏலாம், கைற்றி, ஏதோம், சீதோன் போன்றவையாகும்.

| **எசேக்கியேல். : கர்த்தருடைய நகரம் பாழடைதல்.** |
|---|
| **எருசலேம். (4–9, 11–24)** |
| **பன்னிரண்டு உருவகமான செயல்கள்.** |
| எருசலேமின் வரைபடம் வரைதல். (எசேக்கியா4:1–3) |
| 390 நாட்களுக்கு இடப்பக்கமாக படுத்திருத்தல். (4:4, 5) |
| 40 நாட்களுக்கு வலப்பக்கமாகப் படுத்திருத்தல். (4:6) |
| குறைவான சாப்பாட்டை ஆயத்தம் செய்தல். (4:9–17) |
| தலைமயிரையும் முகத்தையும் சவரம் செய்தல். (5:1–4) |
| காலால் துள்ளி கையால் தாளமிடுதல். (8:11) |
| சிவர்களுக்கூடாக ஓட்டை போடுதல். (12:1–18) |
| சாப்பிடும்போது நடுக்கத்துடன் சாப்பிடுதல். (12:17–20) |
| வாளினால் வெட்டுதல். (21:9–17) |
| மத்திய கிழக்கின் வரைபடம் வரைதல். (21:18) |
| பாத்திரத்தில் கொதிக்கும் நீரை வற்றவிடுதல். (24:1–14) |
| மனைவியில் மரணச்சடங்கில் கண்ணீர்விடாது இருத்தல். (24:15–18) |
| **ஆறு உவமைகள்** |
| கனியற்ற திராசைச் செடி (15:1–8) |
| தத்தெடுக்கப்பட்ட பெண்பிள்ளை , அவள் வேசியாக மாறினாள். (16:1–63) |
| இரண்டு கழுகுகள். (17:1–21) |
| இரண்டு மெதுவான கிளை அரும்புகள்.(17:22–24) |
| தாய்சிங்கமும் அவளது குட்டிகளும்.(19:1–9) |
| இரண்டு வேசிகள் சகோதரிகள்.(23:1–49) |
| **அவரது மேலதிகமான ஆலயதரிசனம் (8–11)** |
| யூதாதேசத்திலிருந்து கர்த்தருடைய மகிமை வெளியேறுதல். |
| யூதாவிலிருந்து கர்த்தருடைய மகிமை வெளியேறுவதை அவர் காணுதல். |
| **பன்னிரண்டு போதனைகள்/செய்திகள்** |

| | | |
|---|---|---|
| 6:1–14 | 14:13–23 | 21:1–7 |
| 7:1–27 | 18:1–32 | 22:1–16 |
| 13:1–23 | 20:1–44 | 22:17–22 |
| 14:1–12 | 20:45–49 | 22:23–31 |

**குறிப்பு** ; எருசலேம் ஏற்கனவே பாபிலோனியர்களால் கைப்பற்றப்பட்டிருக்கிறது என்றும், பின்னர் அது முற்றுமுழுவதுமாக அழிக்கப்படும் என்றும், தன்னுடன் இருக்கும் சிறைக்கைதிகள் எசேக்கியேல் சிறையிருப்பில் இருக்கும்போது எச்சரிப்பாகக் கூறினார். இதனை நாடகங்கள், உவமைகள் மற்றும் பிரசங்கங்கள் மூலமாகக் கூறி எச்சரிப்பை உறுதிப்படுத்தினார்.

| **தீரு (26–28)** | |
|---|---|
| சரித்திரம். | பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பெரிய வியாபார ஸ்தலமாகும். தாவீதுடையதும், சாலொமோனுடையதும் அரசாட்சிக்காலங்களில் தீரு அரசன் இருவருக்கும் உதவிசெய்தான். |
| இடம் | தீரு உண்மையில் இரண்டு நகரங்களாகும், ஒன்று மத்திய கடற்கரையிலும் மற்றது ஒரு தீவுக்கு அருகாமையில் ஒருமைல் தூரத்தில் உள்ளது. |
| பாவம் | பெருமையும் பொருளாசையும் |
| ஆட்சியாளர்கள் | எத்பால் II (எசேக்கியேலின் காலத்தில்.) |
| தண்டனைகள் | இரண்டு நகரங்களும் அழிக்கப்படும், ஆனால் மீண்டும் கட்டப்பட மாட்டாது. அந்த இடம்வெறும் நிலமாக மாறும், அங்கு மீன்வலைகள் விரிக்கப்படும் .. |
| தீருவுக்குப் பின்னால் கெட்ட | இதனுடைய பாவத்திற்குப் பின்னால் சாத்தான் இருக்கிறான் |

| | |
|---|---|
| சக்தி செயற்படுகின்றது . | என்பதை பலர் ஏற்றுக் கொள்வார்கள். இதனை 28:11–19.துவாக்க் கூறுகின்றது. |
| **எகிப்து(29–32)** | |
| நாற்பது வருடங்களுக்குப் பாழாக்கப்படும் | |
| சிறிய ராஜ்ஜியமாக இருக்கும் | |
| மீண்டும் இஸ்ரவேல் உதவி கோரமாட்டார்கள். | |
| உபத்திரப காலத்தில் தண்டிக்கப்படும். | |

**IV. கர்த்தருடைய மேய்ப்பனாகிய —இயேசுக்கிறிஸ்த்து. (34).**

A. பல பொய்யான மேய்ப்பர்கள் தோன்றுவார்கள்.

1 அவர்கள் ஆடுகளை மேய்ப்பதற்குப் பதிலாகத் தங்களையே மேய்ப்பார்கள். (34:2; 3).

2. இவர்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக்கொண்டு வராமலும், காணாமற் போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கொடூரமுமாய் அவைகளை ஆண்டார்கள். (34:4).

3. மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டுபோயின (34:5).

4. சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. (34:5).

5. ஆதலால் மேய்ப்பர்கள் தண்டிக்கப்படுவார்கள். (34:9).

a. மந்தையை மேய்க்கும் தொழிலைவிட்டு அவர்களை விலக்குவார் (34:10).

b. மேய்ப்பர் இனித் தங்களையே மேய்க்காதபடி என் ஆடுகள் அவர்களுக்கு ஆகாரமாயிராதபடி, அவைகளை அவர்கள் வாய்க்குத் தப்புவிப்பார். (34:9, 10).

c. அவர்கள் நியாயம் தீர்க்கப்பட்டு அழிக்கப்படுவார்கள். (34:16).

**B. மெய்யான மேய்ப்பன்.** (சங் 23; யோவா. 10:11; எபி. 13:20; 1 பேது. 5:4.)

1. தொலைந்து ஆட்டைத் போனதைத் தேடுவார். (34:11).

2. எதிரிகளிடமிருந்து ஆடுகளைக் காத்துக் கொள்ளுவார். (34:12).

3. எல்லா தேசங்களிலிலுமிருந்து தன்னுடையவைகளைச் சேர்த்துக் கொள்ளுவார். (34:13).

4. இஸ்ரவேலின் பர்வதத்தில் அவைகளைப் போஷிப்பார். (34:14).

5. 4 பசும் புல்தரையில் நடத்துவார். (34:15).

6. காயப்பட்ட ஆடுகளைக் காயம்கட்டுவார். (34:16).

7. சுகவீனமாக இருப்பவர்களைச் சுகப்படுத்துவார். (34:16).

8. அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை அவர்கள்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார். (34:23). (எசேக். 37:24; எரே. 30:9; ஓசியா. 3:5.)

9. அவர்களோடு நித்திய சமாதான உடன்படிக்கைசெய்வார். (34:25).

10. அவர் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவார், மற்றும் பரதீசில் சேர்த்து வைப்பார். (34:25-28).

**V. கர்த்தருடைய தேசம் மீள்நிலைப்படுத்தல்— இஸ்ரவேல் (36-37).**

A. இந்த மீள்நிலைப்படுத்தல் அவசியமானதாகும். இஸ்ரவேல் தன்னுடைய பாவத்தின் நிமித்தம் பாலஸ்தீனத்தை விரட்டுத்துரத்தப்பட்டாள். (36:17-19).

B. மீள்நிலைப்படுத்தலுக்கான காரணங்கள்.

1. இஸ்ரவேலின் துக்கத்தைப்பார்த்து நகைத்த புறஜாதித் தேசத்தாரை வெட்கப்படுத்துவதற்காகவும் (36:1-7).

2. கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்காகவும் (36:20-23, 32 புறஜாதிகளின் நடுவே நீங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கினதும் அவர்களுக்குள் உங்களால் பரிசுத்தக்குலைச்சலாக்கப்பட்டதுமான என் மகத்தான நாமத்தை நான் பரிசுத்தம் பண்ணுவேன்.

**C. மீள்நிலைப்படுத்தலின் நோக்கம் (37:1-14).**

1. பள்ளத்தாக்கில் நிறைய இருந்த உலர்ந்த எலும்புகளைப் பார்த்து தீர்க்கதரிசனம் உரைக்கும்படி எசேக்கியேலுக்கு கட்டளையிடப்பட்டது, (37:1-6).

2. நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று; இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. (37:7).
3. அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; (37:8).
4. ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது. அப்பொழுது அவர் என்னைப்பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை; மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

**D. இந்த மீள் நிலைப்படுத்தலின் அடையாளம். (37:15-22).**

1. எசேக்கியேல் இரண்டு மரக் கோல்களில் கீழ்க்காணும் வார்த்தைகளை எழுதினான்.

a. முதலாவது கோலில் எழுதப்பட்டது: "யூதாவுக்கும் அதைச் சேர்ந்த இஸ்ரவேல் புத்திரருக்கும் "

b. இரண்டாவது கோலில் இவ்வாறு எழுதப்பட்டது : "எப்பிராயீமுக்கும் அதைச்சேர்ந்த இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருக்கும் ."

2. கோல்கள் செங்கோலுக்குச் சம்மானவை என Dr. Charles Feinberg என்ற ஆராய்சியாளர் குறிப்பிடுகின்றார் (எண்ணா. 17:1-2). 'யூதாவும் அவர்களுடன் சேர்ந்தவர்களும் (வ. 16) தெற்குராஜ்ஜியத்தையும் அவர்களுடன் இணைந்தவர்களையும், யூதாவையும் அவர்களுடன் இணைந்த எப்பிரகாயிம், சிமியோன் எனபவர்களையும் உள்ளடக்கியுள்ளது

3. எசேக்கியேல், பிற்பாடு இரண்டு கோல்களையும் ஒரேகையில் வைத்திருந்தது, கர்த்தர் இரண்டு கோத்திரத்தாரையும் இணைப்பதற்கான அடையாளமாகும். (37:17-20).

### E. மீள்நிலைப்படுத்தரினால் ஏற்படும் நன்மைகள்.

1. திரும்பவும் ஒருமுறை கர்த்தருடைய பிள்ளைகளாக வருவதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். (36:28; 37:27).

2. நல்ல தண்ணீர் தெளிக்கப்படல். (36:25, 29, 33). இது மோசேயின் காலத்தில் இடம் பெற்றது பாலான பரிசுத்தப்படுத்தலாகும். (எண். 19:17-19.)

3. உள்ளான பரிசுத்த ஆவியை வைத்திருத்தல். (36:27; 37:14). (எசேக். 39:29; ஏசாயா. 44:3; 59:21; யோயேல் 2:28, 29; அப்:16-18.)

4. புதிய இருதயத்தைக் கொடுப்பேன். (36:26).

5. புதிய ஆலயத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்தல். (37:26, 28).

6. தாவீதினால் அரசாளப்படும். (37:24).

7. தேசங்கள் மத்தியில் ஆசீர்வாதமாக இருப்பார்கள். (36:30).

8. போதுமான பயிர்கள் விளையும். (36:29, 30, 34, 35). (ஏசாயா. 35:1, 2; 55:13; சகரி. 8:12.)

9. இஸ்ரவேலர்களை மீண்டும் குடியேற்றப்படுவார்கள் விஷேடமாக எருசலேமைக் குடியேற்றுவார். (36:38).

10. பரிசுத்த பூமி நித்தியமாக் குடியேற்றப்படும். (37:25).

| **கர்த்தருடைய தேசம் மீள்நிலைப்படுத்தப்படல்.** |
|---|
| இஸ்ரவேல் : எசேக்கியேல் 36, 37 |
| **இதன் அவசியம்** |
| இஸ்ரவேலின் பாவத்தினால் அது வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் தற்போது இல்லை. (36:17–19) |
| **அதற்கான காரணம்** |
| இஸ்ரவேலின் எதிரிகள் தண்டிக்கப்படுவதற்காக(36:1–7)<br>பழியிலிருந்து கர்த்தருடைய நாமம் விலக்கப்படுவதற்காக (36:20–23) |

| தரிசன விளக்கம் |
| --- |
| இஸ்ரவேலின் எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கில் எசேக்கியேல் பேசுதல். (37:1–6)<br>எலும்புகள் ஒன்றாக இணைந்து சதையினால் மூடப்படல். (37:7, 8)<br>மீண்டும் அவர் பேசியபோது ஜீவசுவாசம் அவர்கள் சரீரத்திற்குள் நுழைந்தது. (37:9–14) |
| **அடையாளம்** |
| எசேக்கியேல் ஒரு கோலில் யூதா என்ற பெயரை வரைந்தார், மற்றக் கோலில் இப்பிராகீம் என்ற பெயரை வரைந்தார். (37:15, 16)<br>பின்பு இரண்டு கோல்களையும் ஒருகையில் இணைத்துவைத்திருந்தார், அதன் அர்த்தம் மீண்டும் எப்போ ஒரு நாள் பன்னிரண்டு கோத்திரத்தாரையும் இணைப்பார் என்று அர்த்தமாகும். (37:17–20) |
| **இதன் விளைவு** |
| இஸ்ரவேலர்கள் மீண்டும் கர்த்தருடைய பிள்ளைகளானார்கள். (36:28; 37:27)<br>சுத்த ஜலத்தினால் சுத்திகரித்துக் கழுவப்படல் (36:25)<br>பரிசுத்த ஆவியை வைத்திருத்தல். (36:27)<br>புதிய இருதயம் கொடுக்கப்படல். (36:26)<br>புதிய ஆலயம் உருவாக்கப்படும். (37:26, 28)<br>தாவீதினால் அரசாளப்படும் (37:24)<br>தேசங்களின் நடுவில் நியாயப்படுத்தப்படும். (36:30)<br>போதிய பயிர் விளையும் (36:29; 30, 34, 35)<br>எருசலேமிலும் கைவிடப்பட்ட நகரங்களிலும் மீள்குடியேற்றம் இடம்பெறும். (36:38)<br>பரிசுத்த நகரம் நிதிதியமாக வைத்துக் கொள்ளப்படம் (37:25) |

**VI. கர்த்தருடைய கோபம் வெளிப்படல் —ருஷ்ஷியா (38, 39).**

இந்த இரண்டு அதிகாரங்களிலும், கடைசி நாட்களில் இஸ்ரவேலின் வடபக்கத்திலுள்ள துஷ்ட தேசம் பாலஸ்தீனத்தை முற்றுகையிடும் என்று எசேக்கியா கூறுகின்றார்.

**A. முற்றுகை மேற் கொள்பவரின் அடையாளம்**.

மாகொக் என்ற தேசம் எங்கே உள்ளது? இது அனேகமாக எசேக்கியேல் கூறியது கம்மூனிச நாடாகிய ருஷ்ஷியா என்ற நாடாகும். குறிப்பு; மூன்றுவிதமான நிரூபணங்களைப் பார்ப்போமாக.

1. பூமிசாஸ்த்திரத்தின்படியான நிரூபணம்; எசேக்கியேல் மூன்று பகுதிகளில் இதனைக் கூறுகின்றார். (38:6, 15; 39:2) இந்த முற்றுகையை மேற் கொள்ளும் நாடு வடபகுதியிலிருந்துதான் வரும் என்று கூறுகின்றார். உலகவரைபடத்தைப் பார்க்கும் போது அந்த நாடு ருஷ்ஷியா என்பது புலப்படுகின்றது

2. **சரித்திர நிறுவல்**. மாகோக் தேசத்தின் பரம்பரையினர் நோவாவின் போரனாகிய யாப்போத்தின் சந்ததியினராவார்கள் என உறுதிப்படுத்துகின்றார். இவர்கள் பாலஸ்தின த்திலிருந்து வடபக்கமான தேசத்தில் குடியோறினார்கள் உன்று கூறுகின்றார். யோசபாஸ் என்வருக்கு முன்பாக கிரேக்க சரித்திரவியலாளராகிய கெரேடெட்டாஸ் என்பவர் (Herodotus)மேசெக் (Meshach') பரம்பரையினர் பாலஸ்தீனத்தின் வட தேசத்தில் குடியேறினார்கள் என்று கூறியுள்ளார். (ஆதி.10:2).

**B. முற்றுகையில் பங்குபெறும் தோழமை நாடுகள்**. முற்றுகை செய்யப்படும் போது ருஷ்ஷியாவுடன் ஐந்து நாடுகள் இணைந்து செயற்படும் என்று எசேக்கியா கூறியுள்ளார். அவைகளாவன பெர்சியா, எதியோப்பியா, லிபியா,கோமார், மற்றும் ரெகாராமா (Togarmah). இந்த நாடுகளின் தற்கால பெயர்கள்.:

1. பெர்சியா— தற்கால ஈரான்

2. எதியோப்பியா— கறுப்பின ஆபிரிக்க நாடுகள் (தென்ஆபிரிக்கா)

3. லிபியா —அராபிய ஆபிரிக்கன் நாடுகள். (வடஆபிரிக்கா)

4. கோமார்— கிழக்கு யேர்மனி

5. ரோகார்மா— தெற்கு ருஷ்ஷியர்கள் அல்லது துருக்கி

**C. முற்றுகை இடுவதற்கான காரணங்கள்**.

1. பலஸ்தீனத்துடைய செல்வங்களைக் கொள்ளையிடுவதற்காக (எசேக்கி. 38:11, 12). மத்திய கிழக்கைக் கட்டுப்படுத்துவதற்காக. பழைய காலத்து தேசத்தை வெற்றி கொள்பவர்கள் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா என்பவற்றை வெற்றி கொள்ள வேண்டுமாயின் மத்திய கிழக்கின் பாலத்தைக் கட்டுப்பாட்டிக்குள் கொண்டுவர வேண்டும், அது மூன்று கண்டங்களையும் இணைக்கின்றது.

2. அந்திக்கிறிஸ்துவின் அதிகாரங்களுக்குச் சவால் விடுதல். (தானி. 11:40-44). D. முற்றுகையின் காலவரிசை. சரியான முறையில் இதனைக் கூறமுடியாமலுள்ளது. கீழே கூறப்படும் பரிந்துரைகள் எசேக்கியேல் 38இன் படியும் தானியேல் 11:40-44இன் படியும் அமைகின்றது.

1. எகிப்து பாலஸ்தீனத்தை தெற்கிலிருந்து தாக்கத் தொடங்கும். (தானி. 11:40).

2. ருஷ்ஷியா இஸ்ரவேலை வடக்கிலிருந்து தரைமார்க்கமாகவும், கடற்பரப்பிலும் முற்றுகையிடும். (தானியேல். 11:40).

3. ருஷ்ஷியா இஸ்ரவேலில் நிற்காமல், தொடர்ந்து தென்பக்கமாக முன்னேறும், எகிப்தைக் கைப்பற்றியுள்ள தோழமைநாடுகளுடன் இணைந்து கொள்ளும் (தானி. 11:42, 43).

4. ருஷ்ஷியா எகிப்தில் இருக்கும் போது, வடக்கிலும் கிழக்கிலுமிருந்து வரும் குழப்பமான செய்திகளைக் கேட்டு விரைந்து பாலஸ்தீனத்திற்குள் வந்துவிடும். இந்த செய்தியின் சுருக்கம் என்னவென்று எங்களுக்குக் கூறப்படவில்லை, இதைப்பற்றி பல விதமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன, அவையாவன;-

a. இதில் அதிர்சியூட்டும் செய்தியாக அந்திக்கிறிஸ்த்து கொலை செய்யப்பட்டான் என்றும் ஆனால் அவன் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து விட்டான் என்பதே அந்தச் செய்தியாகும். (வெளி. 13:3.)

b. மேற்கத்தய தலைவனாகிய அந்திக்கிறிஸ்த்துவின் தாக்குதல் இதனுடன் தொடர்புள்ளதாக இருக்கின்றது.

c. இது இந்தியாவையும் சீனாவையும் எச்சரிப்பதாக உள்ளது ("கிழக்கு ராஜாக்கள். ") இவர்கள் போருக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். இங்கு அவன் என்று கூறப்படுபவன் அந்திக்கிறிஸ்துவாகும். இவன் ருஷ்ஷியாவின் அதிகாரியல்லவென்றும் கூறுகின்றார்கள். (தானி11:42 ) இது தவறாகவும் இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது..

E. **முற்றுகையில் ஈடுபட்டவர்களின் அழிவு**. ருஷ்ஷியா இஸ்ரவேல் பர்வதத்தில் தோற கடிக்கப்படும். இந்த தோற்கடிக்கும் நிகழ்வு கர்த்தரால் மேற் கொள்ளப்படும், கீழ்குறிப்பிடும் சம்பவம் முடிவடைந்த பின்பு அது நிகழும்.:

1. ஒரு வல்லமையான நில நடுக்கம். (எசேக். 38:19, 20).

2. ருஷ்ஷிய இராணுவத்தினர் மத்தியில் புரட்சி ஏற்படல். (எசேக். 38:21).

3. இராணுவத்தினர் மத்தியில் கொள்ளை நோய் ஏற்படும். ( எசேக் 38:22).

4. வெள்ளம், ஆகாயத்துக்கற்கள், நெருப்பு, கந்தகம் (எசேக். 38:22; 39:6).
F. முற்றுகையின் விளைவு.

1. எண்பத்தைந்து வீதமான ருஷ்ஷியப்படைகள் கொல்லப்படும். (எசேக். 39:2).

2. முதலாவது கர்த்தருடைய பயப்படுத்தும் (யாகம்) பண்டிகை ஆரம்பமாகும் (எசேக். 39:4, 17, 18, 19, 20). இயாத்த யாகம் அர்மகதோன் யுத்தத்திற்குப் பின்பும் இடம்பெறும். (வெளி. 19:17, 18; மத். 24:28).

3. கம்முனிஸ்த்துக்களின் பயங்கரம் முற்றும்முழுவதுமாக நீங்கிவிடும்.

4. ஏழு மாதங்களாக மரித்தவர்களை அடக்கம் செய்வார்கள். (எசேக்கி 39:11-15).

5. யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை எரிப்பதற்கு ஏழுமாதங்கள் செல்லும். (எசேக். 39:9, 10). கலாநிதி.யோண் வல்வூட் ( Dr. John Walvoord) என்பவர் இந்த உபத்திரப காலத்தில் இவ்வாறாக நிலமைகள் காணப்படும் என்று கூறியுள்ளார்.: "இந்தப்பகுதிகளைக் கற்றுக் கொள் வதில் சில பிரச்சனைகள் உள்ளன. ஒரு குறிப்பு அம்புகளும், வில்லுகளும் வாள்களும் இரத ங்களும்,கேடயங்களும் என்று கூறுகின்றது, தற்கால யுத்தகாலத்தில் இவைகள்யாவும் காலம் கடந்தவையாகும். அதிகமாக குதிரைகள் பயன்படுத்தப்படுவது விளங்கிக் கொள்ளக் கூடிய தாகவுள்ளது. ரஸ்ஷியாவிலே இராணுவத்துடன் தொடர்புபட்டதாக குதிரைகள் காணப்படுகி ன்றன, ஆனால் ஏன் அவர்கள் கவசத்தையும், வில்லையும், அம்புகளையும் பயன்படுத்து கிறார்கள்? இங்கு ஒரு பிரச்சனை எழும்புகின்றது. இங்கு இரண்டு அல்லது மூன்று விடைகள் கிடைக்கின்றன.

1) **முதலாவது காரணம்**;- இங்கு எசேக்கியேல் தனக்கும் பழக்கமான ஆயுதங்களைக் குறிப்பி டுகின்றார். அவைகள் அவருடைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களாகும். தற்கால ஆயுதங்களை உய்த்தறிய முடியாமல் இருந்திருக்கலாம். அவர் சொல்வது என்னவென்றால், இவர்களுடைய இராணுவம் வரும்போது, அவர்கள் யுத்தத்திற்கான முழு ஆயுதத்துடனும்

வருவார்கள். இதற்கான விளக்கமும் தவறாக இருக்கலாம். இந்த பந்தியில் கூறப்பட்டுள்ளதாவது அவர்கள் மரத்திலான வில்லும், அம்பும்போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள்.

2) **இரண்டாவது காரணம்**;- ஆயுதம் பயன்படுத்தக் கூடாது என்ற ஒப்பந்தத்தினால் இவ்வாறு இடம்பெற்றிருக்கலாம். இது இப்படி இருக்குமானால், கடைசிக்கட்ட முயற்சியாக பழைய காலத்து ஆயுதங்களை இலகுவாகவும் இரகசியமாகவும் தயாரித்துக் கொண்டு செல்லுதல் வேண்டும். இதுதான் அந்த வார்த்தைகளுக்கான அர்த்தமாக இருக்கலாம்.

3) **மூன்றாவது காரணம்**;- தற்காகல ஏவுகணைகள் கடைசிக்காலத்தில் உலோகங்களைத் தேடி அழிக்ககூடிய தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்கும், அதனால் அவை இலகுவில் உலோக ஆயுதங்களைத் தேடி அழித்துவிடும். இதனால் உலோக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தி அதற்குப்பதிலாக மரத்திலாலான ஆயுதங்களாக, அம்பும், வில்லும், மரத்திலானான இரதங்களும் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம்" (*The Nations in Prophecy,* pp. 115, 116)

| **கர்த்தருடைய கோபம்—விளக்கம்** |
|---|
| ருஷ்ஷியா: எசேக்கியேல் 38, 39 |
| **1. முற்றுகை இடுபவர்களின் அடையாளம்**. |
| புவியியல் நிறுவல், சரித்திரநிறுவல். பாஷை நிறுவல். |
| **2. முற்றுகையில் --நேச நாடுகள்** |
| பெர்ஷியா<br>எதியோப்பியா<br>லிபியா<br>கோமார்<br>ரேகாராமா |
| **3. முற்றுகைக்கான காரணங்கள்**. |
| இஸ்ரவேலின் சொத்துக்களைப் பணமாக்குதல் (38:11, 12) அந்திக்கிறிஸ்த்துவின் அதிகாரங்களுடன் சவால் விடுதல். (தானி. 11:40–44) |
| **4 முற்றுகையின் விளைவு** |
| ருஷ்ஷியா முற்றுமுழுதாக கர்த்தரால் வெற்றி கொள்ளப்படும். (38:21–23) இஸ்ரவேலின் பர்வதத்தில் ருஷ்ஷிய படைகள் 6/5 அழிக்கப்படும். (39:2) போர்ஆயுதங்கள் ஏழு வருடங்களாக எரிக்கப்படும். (38:9) மரித்தவர்களைப் புதைப்பதற்கு ஏழுவருடங்கள் செல்லும். (38:12) |

**VII. ஆலயத்தில்--- கர்த்தருடைய மகிமை காணப்படல். (40-48).**

A. இது வேதாகம ஒழுங்கு. வேதாகமத்தில் குறப்பட்டுள்ள ஏழுவிதமான ஆலயத்தில் ஆயிரம்வருட ஆலயமானது ஏழாவதாகும். ஏழு வகையான ஆலயங்களாவன:

1. மோசேயின் கூடாரம். —யாத்திராகமம் 40 (கி.மு.1500-1000)

2. சாலொமோனின் ஆலயம் —1 ராஜா5-8 (கி.மு.1000-586)

3. செருபாபேலின் ஆலயம் (எரோதுவினால் மீளக்கட்டப்பட்டது)— எஸ்றா 6; யோவான் 2 (516 கி.மு. தொடக்கம் கி.பி. 70)

4. இயேசுக்கிறிஸ்த்துவின் சரீரமாகிய ஆலயம் —யோவான் 2:21 (கி.மு. 4 தொடக்கம் கி.பி. 30வரை)

5. சபையாகிய ஆவிக்குரிய ஆலயம். —அப் 2; 1 தெசலோ. 4 (பெந்தகோஸ்தே நாளிலிருந்து இரகசிய வருகை வரை.)

a. முழு சபைகளும் (எபேசி. 2:21)

b. உள்ளூர் சபை (1கொரி 3:16, 17)

c. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும். (1கொரி. 6:19)

6. உபத்திரப காலத்திற்குரிய ஆலயம். — வெளிப்படுத்தல் 11 (இரகசிக வருகை தொடங்கி அர்மகதோன் யுத்தம்வரை)

7. ஆயிரம்வருட ஆலயம் —எசேக்கியேல் 40-48; யோயேல் 3:18; எசாயா 2:3; 60:13; தானியேல் 9:24; ஆகாய் 2:7, 9

**B. இது பரிசுத்த காணிக்கையாகும்**. ஆயிரம்வருட அரசாட்சியில் பாலஸ்தீனம் இஸ்ர வேலர்களுடைய பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் மீண்டும் பங்கிட்டுக் கொடுக்கப்படும். இந்த தேசம் மூன்று பகுதிகளாக வகுக்கப்படும். வடபகுதியை ஏழு கோத்திரங்கள் பெற்றுக் கொள் வார்கள், மற்றய ஐந்து கோத்திரத்தாரும் தெற்குப் பகுதியைப் பெற்றுக் கொள்வார்கள். இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடைப்பட்ட பகுதியாக இடம் " பரிசுத்த நிலம் " என்று அழைக்கப்படும். பரிசுத்த காணிக்கைக்கான இடம் பரந்த விசாலமான சதுக்கமாகும். இதன் நீள அகலம் 30மைல் களாகும் 1160 சதுரமைல்களைக் கொண்டதாகும். இது இறையியல் ஆராதனைக்குரிய இடமாக ஆயிரம்வருட அரசாட்சியில் வேறுபிரிக்கப்பட்டிருக்கும், ஆலயமானது இந்த சதுக்கத்தின் மத்தியில் காணப்படும், ( பரிசுத்த காணிக்கையின் இடமாகும்) இது எருசலேம் நகரத்திலில்லை, இது மிகவும் உயர்ந்த மலையில், அற்புதமாகக் கட்டியெழுப்பப்படும்.( ஏசா 2:3; மீகா 4:1-4; .எசேக் 37:26.) (*வரப்போகின்ற காரியம் என்ற புத்தகத்திலிருந்து பக்கம்*.510, 514)

C. இதன் அளவுத்திட்டங்கள் (40:1–42:20; 46:21-24).

**D. இதன் நோக்கம் :**

1. இங்கு கர்த்தருடைய மகிமை தங்குவதற்கான இடத்தை ஆயத்தம் செய்தல். (43:1-17).

2. அரசனின் மகிமை தங்குவதற்கான ஒரு நிலையத்தை ஆயத்தம் செய்தல். (43:7). (ஏசா. 2:2, 3; மீகா 4:2.)

E. இதனுடைய ஆசாரிய தத்துவம். (44:5-31). சேதோக்கின் புத்திரருக்கு ஆசாரியத்துவம் ஏற்பாடாகியுள்ளது என்று நான்கு விஷேட இடங்களில் கூறப்பட்டுள்ளது. (எசே. 40:46; 43:19; 44:15; 48:11). சாதோக் , தாவீதின் காலத்தில் பிரதான ஆசாரியனாகும். (ஆரோனின் பரம்பரையில் பதினோராவது ஆளாகும்). இவருடைய பரம்பரையினருக்கு இந்தத் தொழில் வாக்குப்பண்ணப்பட்டதாகும். (1 சாமு. 2:35; 1 ராஜா.2:27, 35).

F. இதனுடைய இளவரசன். (45:7, 8, 17; 46:1-20). ஆலயம் பற்றியதான விவரணத்தில், ஒரு வல்லமையுள்ள இளவரசனைக்குறித்து எசேக்கியேல் பதினேழுதடவைகள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

G. இதனுடைய முக்கிய சிறப்பியல்புகளாவன. மோசேயதும், சாலொமோனினதும் ஆலயத்தில் பலபொருட்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும் அத்துடன் எரோது ஆயிரம் வருட அரசாட்சியின் ஆலயத்தில் இல்லாதிருப்பான்.

1. அங்கு திரைச்சீலை இருக்காது. திரைச்சீலையானது மேலிருந்து கீழாக இரண்டாக கிழிந்து விட்டது. (மத்27:51) அதனால் அது திரும்பவும் அங்கு இருக்க மாட்டாது. இவ்வாறு கர்த்தருடைய மகிமையைக் காண்பதற்கு யாருக்கும் தடையிருக்காது.

2. அங்கு அப்பத்திற்கான மேசை இருக்காது. அங்கு கர்த்தர் தாமே ஜீவ அப்பமாக இருப்பார்.

3. அங்கு குத்துவிளக்கு இருக்காது. அங்கு குத்துவிளக்கின்மூலம் ஒளி பெறவேண்டிய அவசியம் இருக்காது, கர்த்தர் தாமே உலகத்திற்கு ஒளியாகவிருக்கின்றார்.

4. அங்கு உடன்படிக்கைப் பெட்டி இருக்காது. உடன்படிக்கைப் பெட்டியின் மீது கர்த்தருடைய ஷகீனா மகிமை இருந்தது போல உலகம் முழுவதும் அவருடைய ஷகீனாமகிமை இருக்கும்.

5. கிழக்கு வாசல் மூடப்பட்டிருக்கும். எசேக்கியேலுடைய வார்த்தையைக் கவனிப்போம். "அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்கவேண்டும். (எசேக். 44:2). இந்த கதவு கீழ்குறிப்பிட்ட காரணங்களுக்காக மூடப்பட்டிருக்கும்.:
a. இந்தக் கதவினூடாகவே இயேசுக்கிறிஸ்த்து உட்பிரவேசிப்பார். அவருக்கு கனம் கொடுப்பதற்காக அந்த வாசலூடாக யாரும் உள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

b. கர்த்தருடைய மகிமை கிழக்கு வாசலூடாகவே பழைய ஏற்பாட்டில் வெளியேறியது. (எசேக்10:18, 19). இதனை முத்திரையிட்டு இனிமேல் தேவ சமூகம் தன்னுடைய மக்களை விட்டு வெளியேறாது என்பதை கர்த்தர் ஞாபகப்படுத்துகின்றார்

**H. இதனுடைய பலிகள்.**

நாம் ஏற்கனவே பார்த்தது போல, ஆயிரம் வருட கட்டிடத்தில் பழைய ஏற்பாட்டு ஆலயத்தில் அனேக தட்டுமுட்டுக்கள் இல்லாதிருக்கும், எப்படியோ பித்தளையினாலான பலிபீடம் அங்கே காணப்படும். பழைய ஏற்பாட்டிலுள்ள நான்கு தீர்க்கதரிசனங்கள் ஆயிரம் வருட ஆலயத்தில் மிருகபலி செலுத்தப்படும் என்று கூறுகின்றன. : ஏசாயா 56:6, 7; 60:7; சகரியா 14:16-21; எரேமியா 33:18. ஆனால் ஏன் இந்த பொற்காலத்தில் மிருகபலி செலுத்தப்படல் வேண்டும்.? ஒருவர் தன்னை யார் என்பதை இந்த நல்ல காலப்பகுதியில் காட்டுதல் வேண்டும். இந்தக் காலத்தில் பாவமில்லை, துக்கம் இல்லை, துயரம் இல்லை, வருத்தம் இல்லை, சாத்தான் இல்லை, வேறு பிரித்தல் இல்லை. வேதனைகள் இல்லை, ஆயிரம் வருட அரசாட்சிக் காலப்பகுதியில் பாஷை வித்தியாசமானதாகக் காணப்படும். ஆயிரம் வருட அரசாட்சிக்காலப்பகுதியில் மில்லியன் கணக்கான பிள்ளைகள் பிறப்பார்கள். இவர்கள் உபத்திரப காலத்தில் தப்பிய இஸ்ரவேலர்களும், புறஜாதிகளும் இந்தப்பிள்ளைகளை வளர்ப்பார்கள். இந்த பூரண சமாதான சூழ்நிலையில், இந்த இராஜ்ஜியத்தின் பிள்ளைகளுக்கு புதிய பிறப்பு அவசியமாகும். ஆதாமின் பிள்ளைகளுக்கு எப்படி புதுப்பிறப்பு தேவைப்பட்டதோ அதைப் போலவே இவர்களுக்கும் இரட்சிப்பு தேவையாகும். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (ரோம 3:23 யோவான் 3:3). எப்படி இந்தப்பிள்ளைகள் இதனை அடைய முடியும்? எவ்வாறாக இதனை இவர்களுக்கு போதிக்கமுடியும். இந்த சந்ததிப் பிள்ளைகளளுக்கு பயம், வேதனை, வெறுப்பு, போன்றவை பற்றிய எதுவித அனுபவமும் இவர்களுக்குத் தெரியாது. இதன் காரணத்தினாலேயே, அங்கு மறுபடியும் பலியிடுதல் கொண்டுவரப்படும். இந்த பலியிடுதல் கீழ்கண்டவாறு செயற்படும்.

1. புதிய பிறப்படைதலுக்கான அவசியம்பற்றி ஞாபகப்படுத்தப்படும்.

2. இரட்சிப்பின் விலைமதிப்பு பற்றி விபரித்துக் கூறப்படும்.

3. பாவத்தின் கொடூரம்பற்றி உதாரணங்கள் காட்டப்படும்.

4. கர்த்தருடைய பரிசுத்தம் பற்றி விளக்கம் கொடுக்கப்படும்.

**I. இதன் அலுவலகம் .**

1. பொது வியாபாரம், நிறைகளும், அளவுகளும், ஆலய வரி, போன்றவை. (45:9-16).

2. விஷேடமானவை, காணித்துண்டுகள். போன்றவை (47:13–48:34). முழு காணிகளின் அளவும் ஆபிரகாமுக்கு கர்த்தர் வாக்குறுதி கொடுத்தது போல இருக்கும். (ஆதி. 15:15-21.)

**J. இதன் நதி** (47:1-12).

1. நதியின் ஆரம்ப இடம். — ஆலயத்தின் வாசற்படியின் கீழிருந்து தண்ணீர் புறப்பட்டுக் கிழக்கே ஓடுகிறதாயிருந்தது (47:1).

2. அவர் என்னை வடக்கு வாசல் வழியாய்ப் புறப்படப்பண்ணி, என்னை வெளியிலே கீழ்த்திசைக்கு எதிரான புறவாசல்மட்டும் சுற்றி நடத்திக்கொண்டுபோனார்; அங்கே தண்ணீர் வலதுபுறத்திலிருந்து பாய்கிறதாயிருந்தது. அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இதைக் கண்டாயா என்று சொல்லி, என்னை நதியோரமாய்த் திரும்ப நடத்திக்கொண்டுபோனார். நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவித விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை; அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்; அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்துக்குமானவைகள். (47:2, 6, 12).

3. **நதியின் வல்லமைகள்** - முதலில் தண்ணீர் கணுக்கால் அளவாயிருந்தது, பின்பு முழங்கால் அளவாக இருந்தது, பின்பு இடுப்பளவாக இருந்த்து, இறுதியில் ஆழம் அறிய முடியாதபடி அதிகமாக இருந்தது. (47:3-5).

K. இதனுடைய மகிமையின் மேகம். (43:1-5).

L. இதன் நகரம்

1. எருசலேம் உலகத்தின் ஆராதனை மத்திய நிலையமாக மாறும், அத்துடன் இது ஒரு உயர்ந்த மேன்மையான இடமாக இருக்கும். (சகரியா. 14:10). (ஏசாயா 2:2, 3.)

2. நகரம் ஆறுமைல் சுற்றளவைக் கொண்டிருக்கும் (எசேக். 48:35). இயேசுவின் காலத்தில் நகரம் நான்குமைல் சுற்றளவைக் கொண்டிருந்த்து. 3. அந்த நகரம் “யேகோவா- சம்மா” என்று அழைக்கப்படும், இதன் அர்த்தம் “கர்த்தர் அங்கே இருக்கிறார்” என்று பொருள்படும். (எசே. 48:35).

## ஆயிரம் வருட ஆலயத்தின் நிகழ்வுகள்.

### இவை வேதாக ஒழுங்களின்படியானவை

1. மோசேயின் ஆசாரிப்புக் கூடாரம். (யாத். 40)

*காலம்:* கி.மு.1444—1100

2. சாலொமோனின் ஆலயம் (1 ராஜா. 6)

*காலம்:* கி.மு.959—586

3. செருபாபேலின் ஆலயம். (எஸ்றா 6)

குறிப்பு: இது பின்னர் எரோதுவினால் மிகப் பெரிதாகக் கட்டப்பட்டது.( யோவான் . 2.)

*காலம் :* கி.மு. 516 — கி.பி. 70

4. கிறிஸ்த்துவின் சரீரமாகிய ஆலயம். (யோவான்.2)

*காலம்:* கி.மு. 4 — கி.பி. 30

5. ஆவிக்குரிய ஆலயமாகிய சபை. (அப். 2)

*Dates காலம்:* பெந்தகோஸ்தே நாள் —இரகசிய வருகை

முழுச் சபை (எபேசி 2:21)

உள்ளூர் ஆலயம். (1கொரி. 3:16, 17)

தனிப்பட்ட விசுவாசி (1 கொரி. 6:19)

6. உபத்திரப கால ஆலயம் (வெளி. 11)

*காலம்:* இரகசியவருகை —அர்மகதோன்

7. ஆயிரம்வருட ஆலயம். (எசேக் 40–48)

*காலம் :* ஆயிரம்வருடங்களுக்கூடாக

**இதன் நோக்கம்**

1. கர்த்தருடைய மகிமையின் மேகத்திற்கான இடம் ஆயத்தம் செய்தல். (எசேக் 43)
2. ராஜாவின் மகிமைக்கான இடம் ஒதுக்குதல். (43:7)

**இதன் ஆசாரியத்துவம்**.

சிதோக்கின் வம்சத்தில் வந்த ஆசாரியர்கள். (40:46)

**இதன் இளவரசர்**.

1. நிச்சயமாக கிறிஸ்துவல்ல. (45:22; 46:16)
2. சிலவேளைகளில் தாவீதின் பரம்பரையில் ஒருசராயிருக்கலாம். .

**இதன் முக்கிய அம்சங்கள்**.

1. இங்கு திரைச்சீலை இல்லை
2. அப்பத்திற்கான மேசை இல்லை
3. குத்துவிளக்குகள் இல்லை.
4. உடன்படிக்கைப் பெட்டி இல்லை.
5. கிழக்கு வாசல் எப்போதும் மூடப்பட்டிருக்கும். (44:2)

**இதன் பலிகள். (எசாயா. 56:7; 60:7; எரேமியா. 33:18; .சகரியா 14:16–21)**

1. புதிய பிறப்பின் ஞபகார்த்தமாக
2. இரட்சிப்பின் பொறுமதிக்கான பாடமாக
3. பாவத் கொடூரத்தின் உதாரணமாக
4. கர்த்தரின் பரிசுத்தத்திற்கான விளக்கமாக.

**இதனுடைய நதிகள். (47:1–12)**

1. *ஆரம்ப இடம்:* ஆலயத்தின் கீழிருந்து ஆரம்பமாகும்.
2. ***செல்லும் இடங்கள்:*** சவக்கடலுக்கும், மத்திய தரைக் கடலுக்குள்ளும் செல்லும்.
3. *ஆளம்:* நீந்தக்கூடியளவு ஆளம்.

**இதன் நகரம்**.

1. இதன் சுற்றளவு: ஆறுமைல்கள். (48:35)
2. பெயர்: ஆயிரம் வருட எருசலேம் “யேகோவா சம்மா” என்று பெயரிடப்படும், இதன் அர்த்தம் ” கர்த்தர் அங்கே இருக்கியார்” என்பதாகும். (48:35)

**நன்றி கர்த்தாவே**

**திராணி**.

Youngblood, R. F., Bruce, F. F., Harrison, R. K., & Thomas Nelson Publishers. 1995. *Nelson's new illustrated Bible dictionary*. Rev. ed. of: Nelson's illustrated Bible dictionary.; Includes index. T. Nelson: Nashville

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS**, **INC**. **Wheaton**, **Illinois**

McGee, J. V. (1997, c1981). *Thru the Bible commentary*. Based on the Thru the Bible radio program. (electronic ed.) (Vol. 3, Page 185). Nashville: Thomas Nelson.

[1]MacDonald, W., & Farstad, A. 1997, c1995. *Believer's Bible Commentary : Old and New Testaments* . Thomas Nelson: Nashville

**HOLMAN BIBLE HANDBOOK** *General Editor* **David S. Dockery**

**ENCYCLOPEDIAOF BIBLE FACTS** *Compiled and edited by* **Mark Water**

**The** *Handbook* **of Bible Application** Neil S. Wilson, Editor